ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வைத்ய சந்திரிகை.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின் மாதப் பத்ரிகை





Vol. 11 March, 1948 No. 3



ஆசிரியர்; V. B. நடராஜ சாஸ்த்ரீ, ஆயுர்வேதாசார்ய.
வைத்ய விசாரத, வைத்யவாசஸ்பதி.



வருஷச்சந்தா ரூ. 3—0—0

ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வைத்ய சந்திரிகா

தொகுதி 11] மார்ச், 1948 [பகுதி 3

| | |
|---|---|
| மஹாத்மா காந்தியடிகளின் மறைவு | 63 |
| ஸ்ரீ காந்தி தசகம் | 66 |
| பஞ்சபூத ஸித்தாந்தம் | 71 |
| க்ஷுத்ர குஷ்டங்களில் நந்தி மெழுகு | 79 |
| சிர ரோகத்தின் விளக்கம் | 83 |
| ஓர் வேண்டுகோள் | 88 |
| आयुर्वेदावतारः | 89 |
| மதிப்புரை | 93 |
| கும்பகோணத்தில் நமது மஹா ஸம்மேளனம் | |

## பூர்ண சந்த்ரோதய மகரத்வஜம்

ஓர் மஹத்தான பிரஸித்த ரஸாயனம்.

ஹ்ருதயத்திற்கும் நாடிகளுக்கும் க்ஷணத்தில்
பலமளிக்க வல்லது.
அநேக வித நோய்களில் அநுபான விசேஷங்களால்
உபயோகமுள்ளது
இது வைத்யர்கள் யாவருமறிந்ததே
ஆனல்
மருந்தின் சக்தி உயர்வு
செய்முறைத் தேர்ச்சியையும் பரிசுத்தியையும் பொருத்ததே
எமது பூர்ண சந்த்ரோதய மகரத்வஜம்
சிறந்த சாஸ்த்ரீய முறையில் ஸ்வர்ணம் முழுவதும்
சேரும் வகையில் தயாரிக்கப் பெற்றுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 2 Grs. மாத்திரை 12-க்கு | 5-0-0 | 2 Grs. 40-க்கு | 14-0-0 |
| ,, 20 | 7-8-0 | ,, 100 | 32-0-0 |

தந்தி:
"ATREYA"

ஆத்ரேய ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்,
தென்னூர் ரோடு, திருச்சினுப்பள்ளி.

உ

ஸ்ரீ தந்வந்தரயே நம:

# மஹாத்மா காந்தியடிகளின் மறைவு

மஹாத்மா காந்தியவர்களுக்கு வீரஸ்வர்க்காரோஹணம் ஸம்பவித்துள்ளது. ஹிம்ஸை, அஸத்தியம், அகங்காரம், அனார்ஜவம், பலாத்காரம் முதலிய அரிகளை உலகில் வேரறக் களைய ஆயுள் பூராவும் போர் புரிந்த உத்தம யுத்த வீரர் இவர். மனஸ், வாக்கு, செய்கை எல்லாவற்றிலும் அஹிம்ஸா வீரரான, சாந்தி வடிவமான காந்தி மஹானுக்கு ஒரு பலாத்கார சத்துருவின் கை ஹிம்ஸையினால் நேரில் அடிபட்டு மரணம் ஏற்பட்டது. அவர் உலகத்தில் சாந்தி நிலவுவதற்காக பிரார்த்தனை புரியும் ஸ்தலமே போர்க்களமாக முடிந்தது. போர்க்களத்தில் முன் வைத்த அடியைப் பின் வாங்காது தர்மயுத்தம் புரியும் வீரருக்கு சத்துருவின் அடி



யால் மரணம் ஏற்பட்டால் அவ்வீரருக்கு பாபலேசமின்றி உத்தம ஸ்வர்க்கம் ஏற்படுவதாகவே நமது வைதிகதர்ம சாஸ்திரங்களுடைய கொள்கை. அன்னாருக்கு ஸ்வர்க்கா ரோகண புண்யம் கிடைத்துள்ள போதிலும் காந்தி மஹானின் பிரிவால் நமது பாரதவர்ஷத்திற்கு அபாரமான நஷ்டம், கஷ்டம், சோகம் எல்லாம் ஒருமிக்க ஏற்பட்டுள்ளன.

நமது நாட்டின் விடுதலைக்கும், சுதந்திரத்திற்கும் எத்தனையோ புருஷர்கள் அரும் பெரும்பாடுபட்டுள்ள போதிலும் அவர்களில் அநேகமாக அனைவரும் இந்தியாவின் அபிவிருத்தித் துறைகளில் விதேசங்களையே அநுஸரிக்கும் மனப்பான்மை படைத்தவர்கள். காந்தி மஹான் ஒருவரே ராமராஜ்யம் வேண்டுமென்றும், பாரத தேசத்தின் புராதனக் கலாசாரங்களும், பண்பாடுகளும் புத்துயிர் பெற வேண்டுமென்றும், யந்திர ராக்ஷஸர்கள் ஒழியவேண்டுமென்றும், ஹிருதயம் பாரதீயமாக இருக்கவேண்டுமென்றுமுள்ள ஒரு தனிச் சிறப்பு பெற்றுள்ளவர். மஹாத்மா காந்தி ஸ்வதேச ஸேவை எத்தனை விதங்களில் செய்துகொண்டேயிருந்தார் என்று எண்ணவே முடியாது. அவர் ஈடுபடாத கார்யமே கிடையாதென்று சொல்லுவது மிகையாகாது. ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா ஆயிரக்கணக்கான கோபிகைகளுடன் ஒவ்வொரு கோபஸ்திரீயும் பகவான் தன்னிடமே பூர்த்தியாக இருக்கிறார் என்று எண்ணும்படியாக ரமித்தார் என்றுள்ள சான்றோர் மொழிபோலவே ஸ்ரீமான் காந்தி பாரத தேசத்தின் பிரதி கலாபிவிருத்திக்காகவும் உழைத்தார். மக்களின் ஆரோக்கியத்திற்காக அனவரதமும் பாடுபட்டார். குஷ்டநோய்காரருக்கு தனது கைகளினாலே பணி புரிந்துள்ளார்.

மஹாத்மா காந்தியவர்கள் நமது ஆயுர்வேதத்தின் விஷயமாய் என்ன செய்துள்ளார் என்றறிய வாசகர்களுக்கு ஆவலேற்படுவதியல்பு.

1920-ம் ஆண்டில் டில்லிமா நகரில் ஹக்கீம் அஜ்மல் கான் என்ற பெரியாரின் பெரும் முயற்சியால் ஸ்தாபிக்கப்

பட்டுள்ள 'திப்பி யுனானி ஆயுர்வேத' மஹா வித்யாலயத்தைத் திறந்து வைத்தார். 1925-ம் ஆண்டில் கல்கத்தா நகரில் கவிராஜ் யாமினீ பூஷண ராய் அவர்களுடைய தலைமையில் நடந்து வந்த அஷ்டாங்க ஆயுர்வேத மஹாவித்யாலயத்திற்கு புதிதாக சொந்தக் கட்டடம் ஆரம்பம் செய்ய அஸ்திவாரக்கல் நட்டார். இந்த இரண்டு விழாக்களிலும் அன்னார் செய்த உபந்யாஸங்களில்— 'வைத்தியர்கள் சரீரப் பிணிகளைப் போக்குவது மட்டும் நோக்கமாய் இருக்கக் கூடாது: சரீரத்தில் பந்தப்பட்டுள்ள ஆத்மாவின் பிணியைப் போக்குவதிலும் முக்கிய நோக்கத்தை அநுஷ்டிக்கவேண்டும். ஆத்மாவின் பிணியகற்றும் உபாயங்கள் ஆயுர்வேதத்தில்தான் நிறைந்துள்ளன ''— என்ற தத்துவத்தை வெகு அருமையாக உபதேசித்துள்ளார். 1945-ல் கஸ்தூரிபாய் காந்தியம்மையார் ஞாபக வைத்திய உதவித் திட்டத்தில் தேசீய வைத்திய முறைப்படி பயிற்சியும் தேசீய திரவியங்களைக் கொண்டு சிகித்சை பெறவும், வசதிகள் நிறுவவும் காலக் கிரமத்தில் முயலவேண்டுமென்று உறுதிகொண்டு ஆயுர்வேதத்தில் உள்ள சில விஷயங்களைத் தானே நேரில் தெரிந்துகொள்ளும் ஆசைகொண்டு ஆயுர்வேதக் கிரந்தங்களைப் படிக்கவும் ஆரம்பித்தார். படிப்பின் பலிதத்தை 1946-ல் நவகாளிக் கலவர பிரதேசத்தில் சுற்றுப்பிரயாணம் செய்யும்போது வெளியிட்டார்— நமது பாரத தேசத்தில் அந்தந்த கிராமத்தில் எளிதில் கிடைக்கும் ஔஷதிகளைக் கொண்டே அங்கங்கே ஏற்படும் நோய்களை அகற்றிக் கொண்டுவிட முடியும் என்று தான் ஆயுர்வேதத்திலும் தேசத்திலும் கண்டுள்ள உண்மையை. வர்தாவில் வசிக்கும் ஸமயத்தில் பண்டித ஸ்ரீ சிவசர்மா, டாக்டர் A. லக்ஷ்மீபதி இவர்களுடன் ஆயுர்வேதாபிவிருத்தித் துறைகளில் பல தடவை கலந்து ஆலோசித்ததுண்டு.

தேசீயக் கலைகள், பண்பாடுகள் முன்னேறவேண்டுமாகில் தேசத்திற்கு விடுதலை இல்லாமல் சிறிதளவும் ஸாத்தியமாகாது என்ற காரணத்தால் தேசவிடுதலைக்காக வேண்டிய கார்யங்களிலேயே மஹாத்மா காந்தி பூர்ண கவனம் செலுத்திக் கொண்டிருந்தார். விடுதலை ஒருவாறு அடைந்ததும், அதன் பயனை நாட்டினர் பெறுவதற்கு முன்பே

பாரத தேசத்தின் துர்ப்பாக்கியம் அன்னாரின் ஆயுளை விழுங்கிவிட்டது. காந்தியடிகளைப் பின்பற்றும் பாரத மக்கள்—"வைத்திய சாஸ்திரத்தின் லக்ஷ்யம் சரீரத்தின் நோய்களை அகற்றி சரீரத்தைக் காப்பாற்றுவதுமட்டுமாயிருக்கக்கூடாது. சரீரத்தில் வாழும் ஆத்மாவின் நோய்களையும் அறுத்து ஆத்ம பந்தத்தை அகற்ற வல்லதாயிருக்க வேண்டும். இந்த லக்ஷ்யம் ஆயுர்வேத சாஸ்திரத்தில்தான் ஸம்பூர்ணமா யிருக்கிறது" என்ற அன்னார் உபதேச ரத்னத்தின் கருத்தை ஆராய்ந்து நடக்கவேண்டும். காந்தியடிகளின் மனப்பான்மை பிரகாரம் இந்தியக் கலைகளிலும் பண்பாடுகளிலும் பெருமை கொள்ள வேண்டும். இவ்வித மில்லாவிடில் தேசவிடுதலை வீண். காந்தியடிகளின் உபதேசத்தை அநுஸரிக்கின்றோம் என்று நினைப்பதும், சொல்லுவதும் ஜம்பம்.

ஸ்ரீ காந்தி மஹானின் மகத்துவத்தையும் பிரிவாற்றுமைத் துயரத்தையும் தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் தலைவர் வைத்யரத்ன. ஸ்ரீ துரைசாமி அய்யங்கார் அவர்கள் அழகான ஸம்ஸ்கிருத சுலோகங்களால் தமிழ் மொழி பெயர்ப்புடன் எழுதியுள்ளார்கள். அவை வருமாறு:

## ॥ श्रीगांधि दशकम् ॥

चरमानुतापश्लोकाः ।

வைத்யரத்னம் பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,
ஆயுர்வேதபூஷணம், ஆயுர்வேதாசார்ய,
இயற்றியது.

---

अष्टाचत्वारिंशदाधिक्ययुक्ते
कल्यब्देऽस्मिन् पञ्चसाहस्रपूर्वे (5048–कलि)
देहं गांधिर्भौतिकं देहलीस्थे
बिर्लाहर्म्ये त्यक्तवान् सत्यशीलः ॥ १ ॥

## ஸ்ரீகாந்தி சரமச்லோகங்கள் என்னும் பாமாலையின் மொழிபெயர்ப்பு.

1, ஸத்யவிரதரான காந்திஜீ இக்கலியுகம் 5048-ஆண்டில் தேஹளி என்கிற டில்லியிலுள்ள பிர்லா பிரபுவின் மாளிகையில் தன் பௌதிக உடலை விட்டு நீங்கினார்.

अब्दे सर्वजिति त्विषामधिपतौ राशिं गते माकरं
पञ्चम्यामसिते दले भृगुदिने पूष्ण्यस्तमासेदुषि ।
प्रायाद्गांधिमहाशयस्तनुभृतामव्याजबन्धुः स्मरन्
रामं, धाम परं हठाद्विशसितः केनापि दुर्मेधसा ॥ २ ॥

2. ஸர்வஜித் என்னும் இவ்வருஷத்தில், மகர மாதத்தில், கிருஷ்ணபக்ஷத்துப் பஞ்சமி திதியில் வெள்ளிக்கிழமை யன்று, சூர்யாஸ்தமய வேளையில், மனித வர்க்கத்திற்கே நிர்ஹேதுக பந்துவாயிருந்த காந்தி மஹாத்மா, திடீரென்று ஓர் அறிவிலியால் வலியக் கொல்லப்பட்டு, ராம நாமத்தை உச்சரித்தவாறு உயர் பதவியடைந்தார்.

साक्षात् बुद्ध इवापरः स्वयमभूद्धर्मस्य लोकोत्तर-
स्याहिंसाप्रथितस्य लोकमहितः प्रास्ताविको यो महान् ।
वीतक्रोधमदो व्यलीकरहितः शान्तः प्रकृत्या च यो
हित्वा सोऽन्तरधात् जनान् हरिजनोद्धर्ता शुचा पूरितान् ॥ ३ ॥

3, ஸாக்ஷாத் மற்றொரு புத்த தேவனைப் போன்றவராய் மிகச் சிறந்த அஹிம்ஸா தர்மத்தை உலகிற் பிரசாரம் செய்து இவ்வுலகில் அனைவராலும் எவர் போற்றப்பட்டு வந்தாரோ, எவர் கோப அஹங்காரங்கள் நீங்கியவர், கபடற்றவர், இயற்கையிலேயே சாந்தமானவர் என்றும் கொண்டாடப்பட்டாரோ, ஹரிஜனங்களின் முன்னேற்றத்தில் ஈடுபட்டும் இருந்தாரோ அத்தகைய காந்தியானவர் அகில ஜனங்களையும் அடங்காத் துயரத்தில் மூழ்கச் செய்துவிட்டு மறைந்துவிட்டார்.

मोघः संप्रति दीर्घकालविहितः स्वाराज्यलाभोद्यमः
संवृत्तः सपदि प्रियंकरपितू राष्ट्रस्य पञ्चत्वतः ।

यत्नेनैव चिराय यस्य महता क्लेशेन देशे प्रजा:
स्वातन्त्र्यं समवाप्य राज्यभरणे स्वैरं क्रियाः कुर्वते ॥ ४ ॥

4. தேச நன்மையிலேயே கருத்துள்ளவரான பிரஜைகளுக்குப் பொதுப் பிதாவாகக் கருதப்பட்ட காந்தி மஹான் இறந்துவிடவே, நெடுநாட்களாக நாம் விடாமுயற்சியுடன் கோரி வந்த சுயராஜ்யமடைந்து செய்யும் முயற்சி ஒரு க்ஷணத்தில் வீணாய் விட்டது. இம் மஹானுடைய பெருந்துன்பங்களையும் கருதாத நீண்ட முயற்சியாலன்றோ இந்நாட்டில் ஜனங்கள் சுதந்திரம் என்பதை அடைந்து சுயேச்சையாக அரசு செலுத்த ஆரம்பித்திருக்கிறார்கள்?

हन्तैष प्रभवेद्बलादुपनतं राष्ट्रं कथं दुर्दशा-
पारम्पर्यमुपोढदुर्हृदुदितं सोढुं प्रशान्तश्चिरम् ।
ग्रीग्देशीयवरूथिनीभिरजहन्मोषेच्छुभिर्यावनैः
म्लेच्छैश्च प्रहतोऽद्य दैवममुषत् गांधिं च तद्धूर्वहम् ॥ ५ ॥

5. இந்நாடு நீண்ட காலமாய் வலியப் போராட வந்த பகைவர்களால் நேரிட்ட வரிசையான துன்பங்களைப் பொறுமையுடன் இருந்து எவ்வாறு தாங்கக் கூடும்? ஆதியில் கிரேக்கப் படைகள் வந்து தாக்கின; பிறகு அநேக யவநர்கள் கொள்ளையிடும் நோக்கத்துடன் வந்து தாக்கினர்; மிலேச்சர்களாலும் மீண்டும் தாக்கப்பட்டு வருந்தியது இந்நாடு; இப்பொழுது இத்தேசம் ஈடேறும் பாரத்தைத் தாங்கி வந்த காந்தி மஹாத்மாவையும் தைவம் நம்மிடமிருந்து கொள்ளை கொண்டு விட்டதன்றோ?

न प्रेम्णा भुवि कश्चिदस्य समभूत् नाकृष्टचित्तो बलात्
कोऽप्यस्मिन् न च वैरबुद्धिमदधात् तस्मादृते घातुकात् ।
भूम्यां सर्वजनप्रियः स्वयमभूदित्याकलय्यादरात्
दैवं नूरमचूचुरत् गुणनिधिं गांधिं स्वधाम्नेऽधुना ॥ ६ ॥

6. இம்மஹானுடைய அன்பினால் வலியவே மனம் இழுக்கப்படாதவன் எவனுமில்லை; அவ்வொரு பாதகனைத் தவிர்த்து இம் மஹானிடம் பகை கொண்டவனும் ஒருவனில்லை. இவர் பூமியில் அனைவருக்குமே அன்பினராயிருக்க, தனக்குந்தான் வேண்டுமெனக் கருதியது போல் சற்குண நிதியான காந்தியைக் கடவுள் தன் உலகுக்கு வலியத் தூக்கிக் கொண்டுவிட்டார்.

दासो मोहनपूर्वकः स्वगुणतो नाम्ना च गांधिर्जन-
स्याबालस्थविरं तथाऽपि मनुजेष्वन्यादृशः सोऽभवत् ।
सर्वैरेष जनैस्तु भारतमहादेशस्य चाधीश्वरः
संजातो मकुटादृते प्रभुगुणैरित्येव संमानितः ॥ ७ ॥

7. இவர் சிறுவர் முதல் கிழவரீறாக அனைவருக்கும் தன்னை தாஸனாகக் கருதினார்; தன் அருங் குணங்களால் அனைவருடைய உள்ளத்தையும் கவர்ந்திழுத்தார்; தாஸகுணம் மோஹனகுணம் இவை இவரிடமிருந்ததாலேயே இவருக்கு மோஹனதாஸ காந்தி என்கிற ஏற்ற நாமதேயமும் அமைந்தது போலும்; அனைவருக்கும் ஊழியனாக இருந்தும் இவர் ஓர் அஸாதாரண புருஷனாகவே மனித வர்க்கத்தில் தோன்றி யிருந்தார். ஆகவே இவ்வகண்ட பரதகண்டத்திற்கும், இவரது இராஜ குணங்களைக் கொண்டு, முடிசூட்டா மன்னராகவே ஜனங்களனைவராலும் கௌரவிக்கப் பட்டார்.

सन्त्यस्यां भुवि पार्थिवाः सुबहवः सेवापराश्चापरे
देशस्य प्रथिता परं नयविदो वृद्धा अपि प्रज्ञया ।
तेष्वेकोऽपि महात्मतां न गुणतः शक्त्या प्रयत्नेन वा
प्राप्तुं प्राभवदात्मना न च यशो भूमण्डले तादृशम् ॥ ८ ॥

8. இவ்வுலகில் அநேக அரசர்கள் உண்டு; தேசத்திற்கு உழைக்கும் புகழ் பெற்ற வேறு தலைவர்களும் இருக்கிறார்கள்; நீதி தர்மங்களுணர்ந்த அறிவிற் சிறந்த பெரியோரும் பலர் உளர்; அவர்களுள் ஒருவரும் தப் குணத்தாலும் திறமையினாலும் முயற்சியாலாவது மஹாத்மர் என்னும் பெயரைப் பெறுவதற்கோ, பூமண்டலம் எங்கும் பரவிய இவ்வித புகழை யடைவதற்கோ முடியாமற் போயிற்று.

गांधिः प्राप दिवं गुणैरनुगुणैर्मर्त्येतरेषां निजैः
भूरेषा भुवनोत्तरस्य निधनात् पुत्रस्य खिन्ना भृशम् ।
आतीर्थं तमिवानुगन्तुमवलंब्याचारमप्युद्यता
कालिन्द्या अधितीरमभ्युपगताऽसंख्येयलोकच्छलात् ॥ ८ ॥

9. காந்திஜி மானிடருக்கு மேலான (தேவர்களுக்கேற்ற) குணங்களால் விளங்கினார்; ஆகவே அவர் தன் குணங்களுக்

கேற்றவாறு விண்ணுலகம் சென்ருர். இப்பூதேவி லோகோத்தரமான தன் புதல்வன் இறந்ததால் மிகவும் துன்புற்ருள்; இவ்விடமிருந்து மஹா யாத்திரை செய்யும் தன் புத்திரனைப் பின்தொடர, முக்கியமாக நீர்த்துரை வரையில் அநுயாத்திரை செல்வது முறையெனக் கருதியது போல், எண்ணிறந்த ஜனக்கூட்டம் என்னும் வியாஜத்தினல் தானே திரண்டு யமுனு நதிக்கரை வரையில் பின் சென்றது போலும்.

धिग्दैवं यदिहोपहृत्य शुभदं तं भारतीयप्रजा-
वर्गस्येव समस्तलोकसुहृदं जह्रे जनान् वञ्चयन् ।
आर्याः सत्पथवृत्तयो वयमिमे धृत्वा कथंचिद्धृतिं
स्वर्गे गांधिमहोदयस्य परमामाशास्महे निर्वृतिम् ॥ १० ॥

*10.* தைவச் செயலை என்னென்று இகழ்வோம்! உலகமனைத்துக்கும் நண்பனுகவும், முக்கியமாய் பரதநாட்டின் நன்மையை நாடியவருமான அம்மஹானை ஜனங்களுக்கு அளிப்பது போல் உதவி உடனே அவர்களை வஞ்சனை செய்து அம்மஹானை அபஹரித்துக் கொண்டுவிட்டதே தைவம்! ஆர்யர்களான நாம் என்றும் பொறுமையுடன் நன்னெறியை நாடுபவர்; ஆகவே இப்பொழுது மனுேதைர்யத்துடன், ஸ்வர்க்கமடைந்த காந்தி மஹாத்மாவின் ஆவி முற்றிலும் சாந்தியிலிருக்கக் கோருகிரேும்.

वैद्यरत्नदुरैस्वामिप्रणीता पद्यमालिका ।
भूयादियं देवभूयंगतश्रीगांधिहृन्मुदे ॥

வைத்தியரத்னம் துரைஸ்வாமி ஐயங்காரால் இயற்றப்பெற்ற இப்பாமாலை தைவத்தன்மை யடைந்த காந்தி மஹாத்மாவின் இருதயகமலத்தில் இருந்து இன்பமளிக்குமாக.

---

குறிப்பு:— 4-ம் ச்லோகம் முதல் 10-ம் ச்லோகம் வரையிலுள்ள பத்தியங்கள் ஒவ்வொரு முதல் எழுத்தும் "மோ ஹ ந தா ஸ காந் தி" என்பதைக் குறிக்கும்.

# பஞ்சபூத ஸித்தாந்தம்[1]

## ஆயுர்வேதத்திற்கு இதுவும் ஒரு மூலாம்சம்.

*[வைத்யரத்னம் பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார், ஆயுர்வேதபூஷணம், ஆயுர்வேதாசார்ய எழுதியது.]*

இம்மையில் நாம் காணும் வஸ்து தத்துவங்களையும், மறுமையைச் சார்ந்த விஷய தத்துவங்களையும் தீர்மானிக்கும் முறையில் முற்காலத்திய பேரறிஞர்கள் ஷட் தர்சநங்களை[2] இயற்றி உலகத்தோருக்கு அளித்தனர். அவற்றுள் வைசேஷிக தர்சநம் என்பது உலகில் கண்களுக்குப் புலப்பட்டும் புலப்படாமலுமுள்ள இயற்கையான பூதங்களைப் பற்றிய உண்மைகளை விசேஷமாக விளக்குகின்றது. வேதா

---

1. ஆயுர்வேத வைத்தியத்தை எந்த முறையில் ஆதரித்து அபிவிருத்தி செய்யலாம் என்பதைப் பரிசீலனை செய்வதற்காக மத்திய கவர்ன்மெண்டாரால் **சோப்ரா கமிட்டி** என்று ஒரு வைத்திய ஸமிதி அமைக்கப்பட்டிருப்பதை நேயர்கள் அறிந்திருப்பார்கள். அக்கமிட்டியார் வைத்தியசாஸ்திர ஸம்பந்தமான தத்துவங்களைத் தீர விமர்சம் செய்து சில தீர்மானங்களைச் செய்யக் கருதி Scientific Memoranda Sub-committee என்கிற ஓர் உப ஸமிதியை அமைத்தனர். இவ்வுப ஸமிதியின் சார்பாக தத்வித்ய ஸம்பாஷா பரிஷத் ஒன்று சென்ற டிஸம்பரில் பூனா நகரத்தில் கூடியது. அதில் இந்தியாவின் பல மாகாணங்களிலிருந்தும் ஆயுர்வேத-வைசேஷிக-ஸாங்க்யாதி சாஸ்திரங்களைக் கசடறக் கற்ற அறிஞர்கள் சுமார் முப்பது பேர்களுக்கு மேல் கூடி அருமையாக வைத்திய சாஸ்திர விமர்சங்களையும் பிரஸங்கங்களையும் செய்தார்கள். இச்சாஸ்திர வல்லோர் பரிஷத், ஸர்வெண்ட்ஸ் ஆப் இந்தியா ஸொஸைடி கட்டிடத்தில் எட்டு நாட்கள் தொடர்ந்து நடந்தது. அந்த ஸமிதியாரின் கோரிக்கைப்படி ஆயுர்வேதத்திற்கு அடிப்படையான பஞ்சபூத ஸித்தாந்தம், த்ரிதோஷ ஸித்தாந்தம், இரஸ வீர்ய விபாகாதி ஸித்தாந்தம் என்று மூன்று சாஸ்த்ரீய விஷயங்களைப் பற்றிய கட்டுரைகள் கமிடியாருக்கு என்னால் அளிக்கப்பட்டன, அவற்றுள் முதலாவதான பஞ்சபூத ஸித்தாந்தம் என்கிற கட்டுரையின் தமிழ் மொழிபெயர்ப்பு இது.

2. ஷட் தர்சநங்கள்:- நியாயம், வைசேஷிகம், ஸாங்கியம், யோகம், மீமாம்ஸை, வேதாந்தம் என்கிற ஆறு சாஸ்திரங்கள்.

ந்தம் முதலிய வேறு சாஸ்திரங்களைப் போல வைசேஷிகம் என்னும் தந்திரம் இவ்வுலகத்திற்குப் புறம்பான ஆத்மார்த்த தத்துவங்களை மாத்திரம் அறிவிப்பதற்காக ஏற்பட்டதல்ல; ஆனால் பிரத்தியக்ஷமான உண்மைகளை உணர்த்துவதற்காக அமைந்த அரிய விஞ்ஞானசாஸ்திரம் வைசேஷிகம். அது வஸ்து தத்துவங்களைப் பகுத்துப் பகுத்து நமக்கு விளக்குகிறது. வேதாந்தம், மீமாம்ஸை முதலியவற்றால் மறுமை ஸம்பந்தமான பாரமார்த்திக ஞானமும், வைசேஷிகம், ஸாங்கியம் முதலியவற்றால் உலகிலுள்ள பொருட்களைக் கூறுபடுத்தி உணருமாறு பௌதிக விஞ்ஞானம் என்கிற அறிவும் பெறலாம்.[1] ஆகவே வைசேஷிக விஞ்ஞானம் என்பது இயற்கையான சராசரங்களின் இயக்கம் ஸம்பந்தமான தத்துவத்தை (Physics) விவரிக்கும் சாஸ்திரம் எனக் கூறவேண்டும். இச்சாஸ்திரம் பிரபஞ்சத்தில் பிரக்ருதி என்கிற இயற்கையினுடைய சுரூபம் இலக்ஷணங்கள் இவற்றையும், முக்கியமாய் பரமாணு ஸித்தாந்தத்தையும் நிரூபிப்பதற்காக ஏற்பட்டது.

தந்மாத்ரைகள் என்று சில உலகில் உண்டு. அவை அணுக்களினும் அணுக்கள்; யந்திர, தந்திராதிகளின் உதவியாலும் உருவறியக் கூடாதவை; அவ்வளவு நுண்ணியவையான அவை ஐந்து பூதங்களுக்கு அடிப்படையாய் அமையும் அம்சங்கள். அதாவது தந்மாத்திரைகள் இயல்பாகவே குருத்தன்மையுள்ள வலிமையான தாமஸாதி குணங்களின் சேர்க்கையைப் பெறுமாயின் அப்பொழுது பஞ்சபூத ரூபங்களைப் பெறுகின்றன. தந்மாத்ரா நிலைமையிலிருந்து பரமாணு நிலைமையையும், அதிலிருந்து முறையே ஸ்தூலமான பூதங்களின் நிலைமையையும் அவ்வப் பொருட்களின் தன்மைகளுக்கேற்ப மாறுபாடுகள் ஏற்படும்போது தமோகுணம், ராஜஸகுணம், ஸாத்விககுணம் என்பவை பிரக்ருதியினால் பகுக்கப்பட்டு தந்மாத்ரைகளுடையவும், பரமாணுக்களுடையவும், அணுக்களுடையவும் நுண்ணிய இடை வெளிகளில் இடம்பெற்று, உலகிற்

1. मोक्षे धीर्ज्ञानमन्यत्र विज्ञानं शिल्पशास्त्रयोः। [மோக்ஷ ஸம்பந்தமான அறிவு ஞானம் எனப்படும்; சில்பம், வைசேஷிகம், வைத்தியம் முதலிய சாஸ்திரங்களைப் பற்றிய அறிவு விஞ்ஞானம் எனப்படும்.]

காணப்படும் எண்ணிறந்த பொருட்களுக்கு விசித்திரமான உரு மாறுபாடுகளையும் குண மாறுபாடுகளையும் உண்டு பண்ணுகின்றன. ஆகவே தந்மாத்ரைகளின் பரிணும பேதங்களைக் காரணமாகக் கொண்ட விநோதமான பூதங்களின் உருவங்களே கிரமமாக சித் அசித் என்கிற பௌதிக பதார்த்தங்களின் உற்பூத்திக்கும் முகாந்தரமாகின்றன.

முற்கூறியவாறு மிகவும் நுட்பமான தந்மாத்ரை முதலியவற்றிலிருந்து திரிபடைந்து அமைந்த ஐம் பூதங்கள் என்னும் பொருட்களே, அந்தந்த பூத குணங்களால் அமையப் பெற்ற ஐந்து' இந்த்ரியங்களால் உணரப்பட்டு, பிரத்யக்ஷ வஸ்துக்கள் என்று வழங்கப்படுகின்றன. ஐம் பொறிகளும் அஹங்காரம் என்னும் ஜீவதத்துவத்திலிருந்து உற்பவிப்பவை யென்று வைசேஷிகர் கூறுவர். ஒவ்வொரு ஞானேந்த்ரியமும் நியதமாய் பூதங்களில் உள்ள ஒவ்வொரு குணத்தையே உணரவல்லது. நமது இந்த்ரிய ஞானத்திற்கு உலகத்திற் காணப்படும் உருவமே இலக்காயுள்ளது; அதனுல் ஐந்து ஞானேந்த்ரியங்களுக்கும் பிரபஞ்ச உற்பத்திக்கு ஆதாரமான பஞ்ச தந்மாத்ரைகள் அஃதனதன் குணத்திற்கேற்ப விஷயங்களாய் (இலக்காக) ஆகின்றன. ஆகவே கண், காது, நாசி, நாக்கு, சர்மம் என்னும் ஐம் பொறிகளுக்கும் அந்தந்த பூதத்தின் குணங்களான ரூபம், சப்தம், மணம், சுவை, பரிசம் என்பவை முறையே விஷயங்கள் ஆகும். கண், காது முதலிய ஸ்தூலாவயவங்கள் இந்த்ரியங்கள் அல்ல; அவை மிகவும் ஸூக்ஷ்மமான இந்த்ரியங்களுக்கு ஆதாரமானவை. நுண்ணிய இந்த்ரியங்கள் கண் காது முதலிய புலன்களுக்குப் புலப்படாதவை. ஆகையாலேதான் "எந்த இந்த்ரியங்களால் நமக்குப் பிரத்யக்ஷப் பிரபஞ்சம் உணரப்படுகிறதோ, அவ்விந்த்ரியங்களே சுயம் அப்பிரத்யக்ஷங்கள்" என்கிருர் சரகர்.[1]

பிரகிருதி என்பது த்ரிகுணமயீ (ஸத்வ-ரஜஸ்-தமஸ் என்னும் மூன்று குணங்களாலானது). உலகில் உள்ள

---

1. यैरेव तावदिन्द्रियैः प्रत्यक्षम् उपलभ्यते तान्येव सन्ति अप्रत्यक्षाणि ।' चरकः । (1—13.)

எல்லாப் பொருட்களும் பிரக்ருதியின் பரிணமத்தினல் உண்டானவை. ஆகவே அப்பொருட்கள் (ஸமஷ்டியாக) விக்ருதி எனப்படுகிறது. இப்பொழுது இவ்வாறு நிர்ண யிக்கலாம்:— பிரக்ருதி என்றும் பிரதானம் என்றும் வழங் கப்படும் மூல தத்துவம் ஒன்று. அதுதான் காரண தத்வம். பஞ்சபூதங்கள், பஞ்ச கர்மேந்திரியங்கள், பஞ்ச ஞானேந் த்ரியங்கள், மனது என்கிற பதினாறு தத்துவங்களும் பிர க்ருதியின் காரியங்கள்; ஆகவே இவ்வனைத்தும் விக்ருதி யெனப்படுகிறது. இவ்விதம் பிரக்ருதியையும் சேர்த்துப் பதினேழு தத்துவங்கள் உண்டு. ஜீவன் என்பது புருஷன்; அஜ்ஜீவன் உலகில் எதற்கும் காரணமாகாது, காரியமுமா காது; கார்ய காரண ஸம்பந்தங்களற்றிருப்பதால் ஜீவனை நிர்விகாரமென்பார்கள். ஸாங்க்யத்திற்கூறிய மஹத் அஹங் காரம் என்னும் இரண்டு தத்துவங்களை வைத்திய சாஸ்தி ரத்திற்கு அதிக அவசியமில்லாதனவெனக் கருதி இங்கு நான் விவரங்களுடன் பிரஸ்தாபிக்கவில்லை.

இத்தமிழ் மொழிபெயர்ப்பில் வைசேஷிக ஸம்பந்த மான விஷயங்களை மிகச் சுருக்கமாகவே விளக்குகிறேன். திரவ்யம், குணம், கர்ம, ஸாமான்யம், விசேஷம், ஸமவா யம் என்று கணாதர் பதார்த்தங்களை ஆறுவிதமாகப் பிரித்து வழங்குகிறார். வைசேஷிகர்களில் சிலர் அபாவம் என்பதை ஏழாவதாகக் கூட்டியிருக்கிறார்கள். இவ்வுல கத்தை உற்றுப் பரிசீலனை செய்தால், முற்கூறிய அம்சங் களைத் தவிர்த்து வேறொன்றும் காணக்கிடைக்காதென்பது வைசேஷிகர்களின் கொள்கை.

அவற்றுள் திரவ்யம், குணம், கர்ம என்கிற மூன்றும் உண்மையிலே புலன்களால் உணரக்கூடுமாறு அமைந்துள் ளவை; ஆகவே அவை **வைஷயிகத்த்துவங்கள்**[1] எனப் படும். மற்ற ஸாமான்ய-விசேஷ-ஸமவாயங்கள் என்னும் மூன்றும் நமது மனோபாவனையினல், திரவ்யாதிகளி லிருந்து பிரிக்கப்பட்டு, நிர்ணயிக்கப்பட்டுள்ளவை; ஆகை

1. விஷயங்கள் என்றால் சப்தம், பரிசம் முதலியன என்று முன்பே விவரிக்கப்பட்டுள்ளது; அவ்விஷயங்களுக்குச் சம்பந்தப்பட்டவை வைஷயிகங்கள்.

யால் ஏழாவதான அபாவம் என்பதைத் தவிர்த்து இம் மூன்றும் பாவதத்துவங்கள் என்று வழங்கப்படும்; திரவியம் முதலிய ஆறு பதார்த்தங்களையும் பாவபதார்த்தங்கள் என்று கூறுவோரும் சிலர் உளர். இங்கு கூறப்பட்ட வைசேஷிக சித்தாந்தத்தின் படியுள்ள பௌதிகபதார்த்தங்களுக்கும், வைத்திய விசேஷங்களுக்கும் ஒன்றோடொன்று அமைந்துள்ள ஸம்பந்தத்தை சரகர் தம் ஸம்ஹிதையில் முதல் அத்தியாயத்திலேயே விளங்கக் கூறிவிட்டார். அது பின் வருமாறு:—

"ஆகாயம் முதலிய பஞ்ச பூதங்கள், ஜீவன், மனது, காலம் திக்குகள் என்பவை திரவியங்களைப்பற்றிய சுருக்கமான விஷயம். சப்தம் முதலிய அர்த்தங்கள் என்கிற விஷயங்கள்[1] குரு முதலிய குணங்கள்[2] புத்தி தத்துவம், இச்சை, துவேஷம், சுகம், துக்கம், பிரயத்னம் என்பவையும், பரம், அபரம், யுக்தி, ஸங்க்யை, ஸம்யோகம், விபாகம் ப்ருதக்த்வம், பரிமாணம், ஸம்ஸ்காரம், அப்யாஸம் என்பவையும் ஆக இவ்வனைத்தும் குணங்கள் எனப் படுகின்றன. முயற்சி முதலிய (எழுந்திருத்தல் உட்காருதல், ஓடுதல், வமனம், விரேசனம் முதலியன) காரியம் சேஷ்டை என்று கூறப் படுகிறது. திரவ்யங்கள் குணங்களுடன் வேற்றுமையின்றி ஒன்று சேர்ந்திருத்தல் ஸமவாயம் எனப் படும். திரவ்யங்களும் குணங்களும் சேர்ந்திருக்குந் தன்மை நித்யம்; ஏனெனில், திரவ்யத்தில் குணங்களும், குணங்கள் திரவ்யத்திலும் எப்பொழுதும் ஒன்று சேர்ந்திருப்பது இயல்பு. எதில் கர்மாவும் குணங்க

---

1, ஐம்புலன்களுக்கு இலக்கான சப்தம், ரூபம், இரஸம், பரிசம், கந்தம் என்பவை அர்த்தங்கள் என்றும், விஷயங்கள் என்றும், இந்த்ரிய கோசரங்கள் என்றும் வழங்கப்படும்.

2. குரு, லகு, சீதம், உஷ்ணம், ஸ்நிக்த்தம், ரூக்ஷம், மந்தம், தீக்ஷ்ணம், ஸ்த்திரம், ஸரம், மிருது, கடினம், விசதம், பிச்சிலம், ச்லக்ஷ்ணம், கரம், ஸ்தூலம், ஸூக்ஷ்மம், ஸாந்திரம், திரவம் என்பவை 20 குணங்கள்.

ஆக விஷயங்கள் 5, குரு லகு முதலியவை 20, புத்தி தத்துவம் 1, இச்சை முதல் பிரயத்னம் வரையில் 5, பரம் முதல் அப்யாஸமீறாக 10 என்று குணங்கள் 41.

ளும் நிலைத்திருக்கின்றனவோ, அது ஸமவாயிகாரணமான திரவ்யமாகும். ஒரு திரவ்யம் மற்றொன்றுடன் சேரும் போதும், வேறொன்றிலிருந்து விலகும் போதும், அவ்வித சேஷ்டை யென்னும் அசையும் வேலை திரவ்யத்தைப் பற்றியதாயிருக்கிறது. இவ்விதம் ஸாமாந்யாதி ஆறு வித காரணம் கூறப் பட்டது. அக்காரணங்களை ஆதாரமாகக் கொண்ட தாதுஸாம்யம் என்கிற கார்யமே இவ் வைத்திய சாஸ்திரத்தில் பிரஸ்தாபிக்கப் படுகிறது. ஏனெனில், மனிதருடைய தேஹ தாதுக்களைச் சம நிலைமையில் வைத்துக் காக்கும் கார்யமே இச் சாஸ்த்ரத்தின் பயனாகும்.[1] " வைசேஷிக ஸித்தாந்தத்தை அனுஸரித்தே பஞ்ச பூதங்கள், ஆத்மா, மனது, காலம், திசைகள் என்கிற ஒன்பது பதார்த்தங்களைப் பாகுபாடு செய்தார் சரகரும். இப் பூத தத்துவங்களே ஆயுர்வேதத்தின் உயிர் நாடிகள் எனக் கருதக் கூடியனவாயிருக்கின்றன. மேலும், "सार्थाः गुर्वादयो बुद्धिः प्रयत्नान्ताः परादयः । गुणाः प्रोक्ताः" என்று ஆயுர்வேத சாஸ்த்ரத்திற்கு அவச்யமான நாற்பத்தோரு குணங்களையும் ஒரு சிறு ஸூத்திரம் போன்ற வாக்கியத்தில் அடக்கி விளக்கியிருப்பதும் வைசேஷிக சாஸ்த்ரத்தை அனுசரித்த விஷயமேயாகும். ஆனால் ஆயுர்வேதத்திற்கு அவச்யமான பதினேழு அதிக குணங்களை (வைசேஷிகத்தில் 24 தத்துவங்களை)ச் சேர்த்துக் கொண்டார் சரகர்.

சரகர் மாத்திரமல்ல, ஸுச்ருதர் மாத்திரமல்ல, ஆனால் பேளர், காச்யபர், ஹாரீதர் முதலிய முற்காலத்திய வைத்

---

1. खादीन्यात्मा मनः कालो दिशश्च द्रव्यसंग्रहः ।
सार्था गुर्वादयो बुद्धिः प्रयत्नान्ताः परादयः ॥
गुणाः प्रोक्ताः प्रयत्नादि कर्म चेष्टितमुच्यते ।
समवायोऽपृथग्भावो द्रव्यादीनां गुणैर्मतः ॥
स नित्यो यत्र हि द्रव्यं न तत्रानियतो गुणः ।
यत्राश्रिताः कर्मगुणाः कारणं समवायि तत् ॥
संयोगे च वियोगे च कारणं द्रव्यमाश्रितम् ।
.....................................
इत्युक्तं कारणं कार्यं धातुसाम्यमिहोच्यते ।
धातुसाम्यक्रिया चोक्ता तन्त्रस्यास्य प्रयोजनम् ॥

திய சாஸ்திரப் பிரவர்த்தகர்கள் ஏனையோருங் கூட சரீரா ரோக்கியம், ஆயுள் அபிவ்ருத்தி இவற்றை யுத்தேசித்து ஆயுர்வேதம் அமைந்ததென்றும், உடலும் உயிரும் பஞ்ச பூதங்களின் தொகுதியினுல் உண்டானதென்றும் ஏற்ற முகாந்தரங்களுடன் நிரூபித்திருக்கிறார்கள். பஞ்ச பூதங்களுக்கும், குரு லகு முதலிய குணங்களுக்கும் நமது சரீரத்திற்கும் உள்ள பரஸ்பரம் விலக்க வியலாத ஸ்தூல ஸூக்ஷ்ம ரூபமான ஸம்பந்தங்களையும் விளக்கி யிருக்கிறார்கள். இங்ஙனமே மூலிகைகளிலும், லோஹ தாதுக்களிலும் முற்கூறிய பஞ்சபூதாம்சங்களுடன் குரு லகு முதலான குணங்களும் பல வேறு அளவுகளில் ஊடுருவிக் கலந்திருக்கின்றன வென்பதையும் ஆயுர்வேதப் பிரவர்த்தகர்கள் கண்டறிந்தார்கள். ஆகவே மானிட உடலில் விக்ருதி என்கிற வியாதி ரூபமான கோளாறுகள் நேரிடும் நிலைமைகளில், ஏற்றத் தாழ்வடைந்த அந்தந்த பூதாம்சங்களுக்கும், அப்பூத குணங்களைப் பெற்றுள்ள வாதாதி தோஷங்களுக்கும் ஸமநிலைமையை யுண்டுபண்ணக்கூடிய பஞ்சபூதாம்சங்கள் அடங்கிய ஔஷதிகளையும், லோஹ-தாது முதலியவற்றையும் பிரயோகித்து, தாது ஸாம்யம் என்கிற க்ரியையை நிறைவேற்றலாம் என்று ஆயுர்வேத நூல்கள் யுக்தி யுக்தமாய் உபதேசிக்கின்றன. உலகத்தில் உள்ள பிரக்ருதி விக்ருதிகளுக்கும், உடலிலுண்டான பிரக்ருதி விக்ருதிகளுக்கும் நெருங்கிய ஸம்பந்தங்களை உற்றுணர்ந்தே நிதாந லக்ஷணங்களும், சிகித்ஸா கிரமங்களும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இம் முகாந்தரத்தை ஆதாரமாகக் கொண்டே 'உலகத்தில் பூத விசேஷங்கள் எவ்வளவு உண்டோ அவ்வளவு மனிதனிடமும், எவ்வளவு பூதாம்சங்கள் மனிதனிடமுண்டோ அவ்வளவு உலகிலுமுண்டு' [1] என்கிறார் சாரீரஸ்த்தாநத்தில் சரகர். மேலும் "பொருட்கள் யாவும் ஐம்பூதங்களாலானவை; நமது உயிருணர்ச்சிகளுக்கு ஆதாரமாயுள்ள தேஹமும் பஞ்சபூதங்களின் விகாரங்களையும்

---

1. यावन्तो हि लोके भावविशेषाः तावन्तः पुरुषे, यावन्तः पुरुषे तावन्तो भूतसंघा लोके च ।

சேர்க்கையையும் பெற்று அமைந்துள்ளது" என்றும் அவர் கூறுகிறார்.[1]

ஆங்கில வைத்தியம் கற்றவர்களும், இக்காலத்திய விஞ்ஞான சாஸ்திரம் பயின்றவர்களும் ஆயுர்வேத வைத்தியத்திலுள்ள சாஸ்த்ரீய தத்துவங்களைத் தம் மனம் போனபடி விமர்சம் செய்து தவறுதலான கொள்கைகள் வெளியிடுவதை நான் அறிவேன். இக்காலத்திய விஞ்ஞான சாஸ்திர விற்பன்னர்கள் தாம் வழங்கும் மூலத்திரவ்யங்கள் என்னும் வஸ்துக்களுக்கும் (elements), ஆதிகாலத்திய பரதநாட்டுச் சாஸ்திரஞ்ஞர்கள் கூறியுள்ள பஞ்ச பூதங்களுக்கும் மேலெழுந்தவாரியாய் ஏதோ ஒருவாறு ஸமந்வயம் செய்யக்கருதி பூதங்கள் என்கிற பரிபாஷைக்கு எலிமெண்ட்ஸ் என்கிற ஆங்கில பரிபாஷையைப் பர்யாய நாமமாகக் கூறி, முறை தவறி விஷயங்களைக் குழப்பி விடுகிறார்கள். பஞ்சபூத தத்துவங்களுக்கும் எலிமெண்ட்ஸ் என்கிறவற்றிற்கும் உண்மையில் ஒரு ஸம்பந்தமுமில்லை. தந்மாத்ரைகளிலிருந்து உற்பவித்த (அல்லது திரண்டுருண்டு அமைந்த) உலகப் பொருட்களை நாம் ஐந்து விதமாகப் பாகுபாடு செய்து பஞ்ச பூதங்கள் என்று வழங்குகிறோம்; இவ்வனைத்தும் தந்மாத்ரைகளாயிருக்கையில் அப்ரத்யக்ஷங்கள்; பஞ்ச பூதங்களாகத் திரண்டு அமைந்தபின் புலன்களுக்குப் புலப்படுகின்றன. இவ்வைந்து விதமான திரண்ட உலக வஸ்துக்களில் ஒவ்வொன்றும் (ஒவ்வொரு பூதம்) ஒவ்வொரு இந்த்ரியத்தினால் உணரக்கூடியதாகிறது. இதுதான் பஞ்ச பூதங்களுக்கும் பிராணி சரீரங்களுக்கும் இயற்கையில் அமைந்துள்ள ஸம்பந்தங்களைப்பற்றிய விஷயச் சுருக்கம்.

(த்ரிதோஷஸித்தாந்தம் முதலியது தொடரும்.)

---

1. द्रव्याणि सर्वाणि पाञ्चभौतिकानि । तत्र शरीरं च चेतनाधिष्ठानभूतं पञ्चभूतविकारसमुदयात्मकम् ।

# க்ஷுத்ர குஷ்டங்களில் நந்தி மெழுகு

[E. ஸ்ரீனிவாஸன், ஆயுர்வேத பிஷக், சென்னை.]

குஷ்டரோக நிதானத்தில் க்ஷுத்ரகுஷ்டங்களின் கீழ் சொல்லப்பட்ட, ஏக குஷ்டம், சர்ம குஷ்டம், கிடிமம் முதலியவைகளுல் ஆயுர்வேத முறைப்படி சிகித்ஸா முறைகளை அனுசரித்தால் அவைகள் நாட்பட்ட போதிலும் சித்திபெற முடியும். இருப்பினும் தற்காலத்தை அனுஸரித்துப் பொதுவாக அந்தந்த அத்தியாயங்களின் கீழ் சொல்லப்பட்டிருக்கும் சிகித்ஸைகளில் பஞ்சகர்மங்களையும் விதிப்படி செய்து முடித்து நோயாளிகளை அவரவர் நோய்களினின்றும் விடுவிக்கு முன் அனேக இடுக்கண்களைத் தாண்டவேண்டி யிருக்கின்றது. அவைகளில் முக்கியமான சில. 1. தற்கால விலைகளை முன்னிட்டு தைலம் க்ருதம் முதலிய ஸ்னேக சிகித்ஸையின் அதிக விலை 2. வியாதியஸ்தன் பணக்காரனுயிருந்தும் தன் நோயின் அளவை அறியாது சிலதினங்கள் மருந்துண்ட பின் வைத்தியனிடமோ, ஆயுர்வேத முறைகளிடமோ அவநம்பிக்கை கொள்ளுதல். 3. பின்னும் முக்கியமானது பிற நாட்டு வைத்திய முறை நம் தேசத்தில் குடிகொண்டு இஞ்சக்ஷன் மயமாகப் பரப்பி மக்களின் மனதை ஆகர்ஷிப்பது. மேலும் பிணியாளிகள் மேனுட்டு வைத்திய முறைகளைக்கைக்கொண்டு எவ்வளவு காலமோ, பணமோ விரயம் செய்தபோதிலும் அவர்களுக்கு அது ஒரு பொருட்டாகத் தோன்றுவதில்லை.

என்னுடைய சிறு அனுபவத்தில் சில க்ஷுத்ர குஷ்டங்களில் (பாமா— குறைந்த பக்ஷம் 2 வருஷங்களாக அனுபவிக்கப் பட்டது. விபாதிகா, சர்மகுஷ்டம் இவைகள்) ஆயுர்வேத முறைப்படி ஸ்னேக சிகித்ஸைகளால்

உபசரிக்கப்பட்டு சித்த வைத்திய முறைகளில் சொல்லப் பட்ட நந்தி மெழுகையும் உபயோகிக்க நன்மதிப்பைப் பெறும் வகையில் குணம் கொடுத்ததுதான். இம்மாதிரி யே நோயாளியும் வைத்தியனிடம் நம்பிக்கை கொண்டு கொஞ்சம் பண விரயமும் செய்து இம்மருந்தை உண்டால் மஹா குஷ்டங்களினின்றும் விடுதிபெற முடியும். நான் மேற்சொன்ன மூன்று க்ஷுத்ர குஷ்டங்களிலும் ஸ்னேஹ, சோதனே, லேபனுதிகளே அனுசரித்து வரச்செய்த மருந்து களில் நந்தி மெழுகின் பிராதான்யத்தைத் தான் எடுத்துக் காண்பிக்கவேண்டியது என் கடமையும் முக்கியமு மாகும்.

மேற் சொன்ன மூன்று க்ஷுத்ர குஷ்டங்களிலும் நான் அனுசரித்த சிகித்ஸா முறை எல்லாம் ஒன்றே. முத லில், விதிப்படி ஸ்னேக சிகித்ஸை ஆரம்பிக்கப்பட்டது. (அஷ்டாங்க ஹ்ருதய குஷ்ட சிகித்ஸையின் கீழ்ச் சொல் லப்பட்ட திக்தகக்ருதம்), ஸ்னேகம் 7 நாட்கள் கொடுக் கப்பட்ட பின் 3 அல்லது 4 கிரெயின் வீதம் காலே மாலே நந்திமெழுகு கொடுக்கலாம். நந்திமெழுகை விழுங்குமுன் வாயில் கொஞ்சம் நெய்யைத் தடவிக்கொண்டு அம்மெழு கை பனேவெல்லத்தில் மறைத்து விழுங்கி ஒருவாய் பச்சை ஜலம் சாப்பிட வேண்டும். இந்நிலேயில் நாம் சில உபத் திரவங்களே எதிர்பார்க்க நேரிடும். அவைகள், தேக வேக் காடு, அழர்ச்சி, கண் எரிச்சல், தாபம், தாகம் இவைகளே யாம். மேற்சொன்ன எந்த ரூபமும் நோயாளிகளால் அம் மூன்று நாட்களுக்குள்ளேயே சொல்லப்பட்ட போதிலும் உடனே நந்தி மெழுகை நிறுத்திவிட வேண்டும். உபத் திரவங்களினின்றும் விடுதி பெற 1. கர்ப்பூர சிலாஜது 10 கிரெயின் வீதம் 3-லிருந்து 4 வேளேகள் நாரிகேளோதகத் தில் சேர்த்துப் பருகலாம். சுக்கு நீக்கிய விடங்க பானீ யத்தில் சர்க்கரை சேர்த்து அருந்தலாம். சந்தனம், சாரிபா, தான்யகம், நெரிஞ்சில் இவைகளேக் கஷாயமிட்டு சர்க்கரை கலந்து குடிக்கலாம். அதிக தாகமேற்படின் பச்சைத் தண்ணீரையே உபயோகிக்கவேண்டும். சாரிபாதி பான கம் இந்நிலேகளில் மிகவும் சாந்தியைக் கொடுக்கின்றது.

இரவு படுக்கும்போது பாலுடன் சர்க்கரை கலந்து குடிக்க வேண்டும்.

சாதாரணமாக, அனேக சிகித்ஸை நோயாளிக்கு சரியாக அப்பியசித்து இராமலிருந்தாலும், மாத்திரை (Dose) அதிகமானாலும், பத்தியமுறை அனுசரிக்கப்படாமலிருந்தாலும் தான் மேற்சொன்ன உபத்திரவங்கள் தோன்றும். மெழுகுண்ணும் 3 நாட்களிலும் பாலும் அன்னமும் தான் ஆகாரமாகக் கொள்ளவேண்டும்.

மெழுகுண்ட 4-வது அல்லது 5-வது தினம் எண்ணை தேய்த்து ஸ்னானம் செய்யவும், மறுநாள் ரேசனத்திற்காக பிணியாளியின், பலம், வயது, குடலின் அழுத்தம் இவைகளைக் கவனித்து வெள்ளை எண்ணை (சித்த வைத்திய முறை) ½ அல்லது 1 அவுன்ஸ் கொடுக்கவேண்டும். மேற்சொன்ன சிகித்ஸாமுறைகளைத் தொடர்ந்து கொண்டிருக்கும்போது அடியில் கண்ட ஏதோ ஒரு லேபம் உபயோகிக்க வேண்டும்.

1. அவல்குஜாதி லேபசூர்ணம்,
2. ரஸோத்தமாதி லேபசூர்ணம்,

இச்சூர்ணங்களை துவரக தைலத்திலோ, நிம்ப தைலத்திலோ கலந்து பூசவேண்டும்.

விவரிக்கப்பட்டவைதான் ஒரு கோர்ஸ் (1st course) இம்மாதிரி 2 அல்லது 3 கோர்ஸுகள் பொறுமையுடன் அனுசரிக்க க்ஷுத்ர குஷ்டங்களினின்றும் நிரந்தரமாக விடுதி பெறமுடியும் என்பது என் பூர்ணமான நம்பிக்கை. கடைசியில் மதுஸ்நுஹி ரஸாயனம், பரங்கி ரஸாயனம் (சித்தா) முதலிய ரக்த சுத்தியைத் தரும் ரஸாயனங்களைக் கொடுக்க, ரக்தம் சுத்தமடைவதுடன் ரோகி தேகதிடமும் மனோ நிம்மதியும் அடைவான்.

இம்மெழுகில் பாஷாணாதிகள் கலப்புள்ளதினால் வாதாதி தோஷங்களை அளந்து மாத்திரை (Dose) நிர்ணயிக்க வேண்டியது அவசியம்.

**சாரிபாதி பானகம் :**

| | தோலா. | | தோலா. |
|---|---|---|---|
| சாரிபா மூலத்வக் | 64 | கர்ஜூரபலம் | 8 |
| உசீரம் | 8 | அதிமதுரம் | 8 |
| சந்தனம் | 8 | சதாவரீஸ்வரஸம் | 8 |
| திராக்ஷை | 8 | சர்க்கரை | 1 வீசை |

பானக விதிப்படி தயாரிக்கவும். Dose : 1 அவுன்ஸ்.

குணம் : தேக தாபசாந்தி, தாகசாந்தி, பித்த ஹரம், ரஸாயனம்.

**வெள்ளை எண்ணெ :**

| | | | |
|---|---|---|---|
| வாய்விடங்கம் | ½ பலம். | ரஸகர்ப்பூரம் (சுத்தி) | 1 பலம். |
| சுக்கு | ,, ,, | | |
| ஏலரிசி | ,, ,, | விளக்கெண்ணெ | 1 வீசை. |

பூரத்தைக் கல்வத்திலிட்டு வெண்ணெ போலரைத்து மற்ற மூன்றையும் இடித்து வஸ்த்ரகாளனம் செய்து விளக்கெண்ணெயுடன் மொத்தமாகக் கூட்டவும்.

Dose :— ½ to 1 oz.

**ரஸோத்தமாதி லேப சூர்ணம் :**

சுத்த ரஸம், சுத்த கந்தகம், சுத்த மனோசிலை, கங்க ஸிந்தூரம், சீரக சூர்ணம், கிருஷ்ணஜீரக சூர்ணம், மரிசம், ஹரித்ரா, தாரு ஹரித்ரா சம எடை மொத்தமாகக் கூட்டி அரைக்கவும்.

குணம் ; கட்டி, படை, சொறி இவைகளைப் போக்க தேங்காய் எண்ணெயுடன் கலந்து பூசவும்.

**அவல்குஜாதி லேபம் :**

பாகுசி, துவக் பீஜம், ஆரக்வத பத்ரம், ஹரித்ரா, சுத்த தாளகம் சம எடை கூட்டி அரைத்து வைத்துக் கொள்ளவும்.

குணம் : த்வச்யம், வர்ண்யம், சொறி, வெடிப்பு, கட்டி, படை, ச்வித்ரம், குஷ்டம் இவைகளில் எண்ணெயுடன் கலந்து உபயோகிக்கவும்.

# பரராசசேகரம் என்னும் வைத்திய நூலிலுள்ள
# சிரரோகத்தின் விளக்கம்.

*[இலங்கா ஆயுர்வேத சித்தவைத்தியக் கல்லூரி ஆசிரியர் வைத்திய கலாநிதி திரு வி. கனகசபை அவர்கள் எழுதி உதவியது.]*

---

இற்றைக்குச் சுமார் அறுநூறு ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்தில் அரசாண்ட பரராசசேகரனும் அவன் தம்பி செகராசசேகரனும் கல்வித் துறையில் ஆர்வமுடையாராய் தமிழுலகிற்குச் செய்த தொண்டுகள் பல. அவற்றுள் வைத்தியமும் ஒன்ருகும்.

இளவலாகிய செகராசசேகரன் அருங்கலா விநோதனாய் பல பண்டித சிரோமணிகளின் உதவிகொண்டு வடமொழியிலுள்ள "தன்வந்திரீயம்" முதலிய நூல்களையும் தென்மொழியிலுள்ள "அகத்தியம்" முதலிய நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு, தன் தமையன் பெயரால் சுமார் பன்னீராயிரம் செய்யுள்களைக் கொண்ட பரராசசேகர மாலையென்னும் அரிய வைத்திய நூல் ஆக்கி வெளியிட்டான்.

இவ்வைத்திய நூல் சொற்சுவை பொருட்சுவை மலிந்துள்ளது. சிற்சில இடங்களில் கற்ருேர்க்கேயன்றி மற்ருேர் எளிதில் அறிந்துகொள்ளக் கூடாத நுண்பொருள் ஆழமுடையது. நோய் வருதற்குரிய காரணங்களையும், அந்நோய்கள் செய்யும் குணங்களையும், அவைகளுக்கேற்ற சிகிட்சை, ரெட்சை, யந்திரிப்பு முறைகளையும் அந்தந்த நோய்களின் கீழ் நன்கெடுத்துச் சொல்லுஞ் சிறப்புடையது!

இந்நூலை சைவநூலாராய்ச்சி வல்லுனரும் வைத்திய பண்டித சிகாமணியுமாகிய திருவாளர் ஐ. பொன்னையா பிள்ளை அவர்களின் பெருமுயற்சியால் இற்றைக்கு இருபது

யாண்டுகளுக்கு முன் சிற்சில குறிப்புகளோடு சுமார் ஏழாயிரம் செய்யுள் வரையில் புத்தக ரூபங்களாக வெளிவந்துள்ளது. இந்நூலே யாழ்ப்பாணத்திலுள்ள "இலங்கா ஆயுர்வேத சித்த வைத்திய கலாசாலை" யில் சித்தவைத்திய பாடங்களாய் வைத்திருப்பதே இதன் பெருமைக்குப் போதிய சான்றாகும்.

இந்நூலினை வசனரூபமாகச் செய்து வெளியிட்டால் தமிழ் வைத்தியர்களுக்கும் ஏனையோருக்கும் இன்றியமையாது பயன்படுமென்பதை யுன்னி "இலங்கா ஆயுர்வேத சித்தவைத்திய கலாசாலை" யில் கல்வி பயின்றவரும், தற்போது ஷை கலாசாலையில் வரும் நோயாளிகட்கு சிகிட்சை புரிபவருமாகிய திரு. எஸ் வைத்திலிங்கம், D. A. M. அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கிச் சிரத்தில் வரும் நோயின் குணங்களையும் அவைகளுக்குரிய சிகிட்சைகளையும் எழுதலாயினேன்.

இக்கட்டுரையில் ஏதாவது பிழைகளிருப்பின் அவைகளை அறிவித்தால் அதனை மனமுவந்து ஏற்றுத் திருத்திக் கொள்வோம்.

மனித உடம்பிலுள்ள உறுப்புகள் 32. அவைகளில் 17 உறுப்புகள் தலையில் அமைந்துள்ளன. அவை பின்வருமாறு. உச்சி, மூளை, நெற்றி, கண், காது, மூக்கு, வாய், புருவம், அதரம், பல், ஈறு, கன்னம், அலகு, நா, தொண்டை, பிடர், கழுத்து என்பன.

இவ்வுறுப்புகளில் வரும் நோய்கள் 1008. இவற்றில் கபாலத்திலுண்டாவன 46. மூளை யென்னும் அமிர்தத்தில் வருவது 16 காதில் வருவது 100. மூக்கில் வருவது 86. கண்ணில் வருவது 96. அலகில் வருவது 36. கன்னத்தில் வருவது 49, பல்லீறில் வருவது 37. டல்லில் வருவது 45. நாக்கில் 34. உள் நாக்கில் 20. அதரத்தில் 16. நெற்றியில் 26. கண்டத்தில் 100. பிடரில் 88. புருவத்தில் 16. கழுத்தில் 36. ஆகக் கூடிய நோய்கள் 847 ஆகும். மற்றய 161 நோய்களும் சிரத்தில் தோன்றித் தேகமுழுதும் பரவி உபத்திரவம் தருமென அறியவும்.

**சிரோ ரோகம் வருவதற்குக் காரணம் :**

பாரமான சுமை சுமப்பதாலும், அதிக வெய்யிலில் சஞ்சரிப்பதாலும், அதிக நாட்சென்று எண்ணெய் தேய்த்து முழுகலாலும், அதிக பெண் போகத்தாலும், சிரத்தில் தடி முதலியன் தாக்கலாலும், செவி, நாசித் துவாரம் இவைகளில் ஈ முதலிய ஜந்துக்கள் புகுவதாலும், அசுத்த, மாகிய நீரில் முழுகுவதாலும், அறிவு மயக்கத்தைத் தருவதாகிய, வெறியுள்ள பொருள்களை உட்கொள்ளுவதாலும் சிரத்தின் மீது அனேகவகையான நோய்கள் உண்டாகும்.

**கபாலத்தின், (உச்சி) நோய்கள் :**

46-ன் வகை: வாத, பித்த, கபமாகிய முத்தோடங்களால் தனித்தனி தோன்றும் நோய்கள் மூன்றும், இரண்டிரண்டு தோடங்களின் கூட்டுறவாலுண்டாவன 6-ம், வாதம் ஒருபக்கக் கபாலத்தில் நின்று தாக்குவதால் 1-ம், ஆக 10-ம், கபாலதேரை 1, கபாலக் கரப்பான் 6, கபால குட்டம் 5, கபாலப் பிளவை 10, கபாலத் திமிர்ப்பு 2, கபாலக் கிருமி 2, கபாலக் கனப்பு 3, கபால வலி 1, கபாலக் குத்து 1, கபால வறட்சி 1, கபால கலை 3, கபால தோஷம் 1 ஆக 46 காண்க.

இனிமேற் கூறிய 46-ல் கபால வாய்வு, கபால பித்தம், கபால சிலேத்துமம், கபால வாதபித்தம், கபால பித்த சிலேத்துமம். கபால சிலேத்தும பித்தம். கபால பாரிச வாதம் கபால பித்தவாதம், கபால சிலேற்றும வாதம், கபால வாத சிலேற்றுமம் என்றும் பத்தில் முற்கூறிய ஆறும் சாத்தியம். பிற்கூறிய நான்கும் அசாத்திய மாகும்.

**கபால வாயுவின் குணம் :**

தலையிடி, பிடரில் கனப்பு, வலது புருவத்தில் குத்து, மூக்கடைப்பு, காதிரைச்சல், கண்களில் வேதனையோடு நீர் பாய்தல், இமை கனத்தல், கண் பார்வை குறைதல், கண்டத்தில் கரகரப்போடு இருமல், அலகில் வேதனை, அண்ணம், நாக்கு விறைத்துப் போதல் ஆகிய உபத்திரவங்கள் உண்டாம்.

இக்கபால வாய்வோடு பித்த சிலேற்பன தோஷங்கள் கூடினால் சன்னிபாத தோஷமென்னும் பெயரைப் பெறும். இதன் குணமாவன: காதில் ஓடு விழுந்து புண்ணாகும், தினவு, சொறி, காதுகளில் வேதனையோடு வாயுபரிதல், அவ்விடத்தில் துர்நாற்றம் வீசுதல், சிரத்தில் தாங்கமுடியாதபடி வேதனை உண்டாகும். இத்தோஷ குணம் சிலருக்கு அசாத்தியமாக முடியும்.

**சிகிச்சை :**

**அசன வில்வாதித் தைலம் :** வேங்கைப்பட்டை, வில்வ வேர் வயிரம், சீந்தில் தண்டு, நிலக்குமிழ் வேர், தான்றி வேர், அமுக்கிராய் வேர், உவாயம் வேர், நொச்சி வேர், காஞ்சூரை வேர், செவ்வள்ளிக் கொடி, இலாமிச்சம் வேர், கோரைக் கிழங்கு, இருவேலி, திரிபலை (கொட்டை நீக்கி) திரிகடு, சித்திரமூல வேர், இவைகள் வகைக்குப் பலம் 10. நறுக்கி யிடித்து ஒரு பாண்டத்தில் 16 படி நீர்விட்டு மேற்கூறிய வேர் சரக்கிடித்த தூளைப் போட்டு சிறுதீயிலெரித்து, இரண்டுபடியாகக் குறுகக் காய்ச்சி வடித்து ஒரு பாண்டத்தில் சேர்த்து பின்பு கையாந்தகரை, சாத்தாவாரிக் கிழங்கு, பொன்னாங்கண்ணி, பேய்ப்புடோல், தாமரை வளையம், சிற்றாமட்டி, இவைகளின் சாறு வகைக்குப் படி அரை வீதம் முன் கஷாயத்துடன் கலந்துகொண்டு, எள்ளெண்ணெ, பசும்பால், செவ்விளநீர் வகை படி 2. இத்துடன் கலந்துகொண்டு, சிறுதீயிற் கொதிப்பித்து பின்பு, சாதிக்காய், கராம்பு, அதிவிடயம், அதிமதுரம், தேவதாரம், சடாமாஞ்சில், மஞ்சிட்டி, செவ்வியம், இலவங்க பத்திரி, ஏலம், பெருஞ்சீரகம், வெண்கோட்டம். சிற்றரத்தை கச்சோலம், திப்பலிமூலம், விளாலரிசி, செண்பகப்பூ தக்கோலம். சந்தனம், பச்சைக்கற்பூரம் வகைக்கு களஞ்சு 3. இவைகளில் கற்பூர மொன்றை நீக்கி, இடித்துச் சூரணம் செய்து, பாலிலரைத்துத் தைலத்தில் கலந்து நாலாநாள் சிறிது மந்தபதத்தில் இறக்கிக் கற்பூரத்தைப் பொடி செய்து வடி கலசத்தில் போட்டுத் தைலத்தை வடித்துக் கொள்ளவும்.

இத்தைலத்தை வாரத்திற் கிருமுறை கண், காது மூக்கு, இவைகளில் மும்மூன்று துளி விட்டும், தலையிலும் தேய்த்து சிகைக்காயரப்பிட்டு இள வென்னீரில் அதிகாலையில் முழுகி வருவதுடன் கீழ்க் கூறும் அவுடதங்களில் ஒன்றை உண்டுவரின் மேற்கூறிய கபாலவாய்வு விரைவிற் சுகந்தருவதன்றி, செவியடைத்தல், செவியின் ஓடுவிழுதல் கபாலக் குத்து, சொறி, திமிர் விறைப்பு, தொண்டைக் கரகரப்பு, உண்ணாக்கு வெடித்தல், வரட்சி, இவைகளோடு இன்னுஞ் சிர, நேத்திர, மூக்கு, வாய் இவைகளிலுள்ள பல நோய்கள் தீரும்.

**சாறணைக் கிருதம்:** சாறடை, வீளி, உத்தமாகாணி முருங்கை, புனைமுருங்கை, சரக்கொன்றை, தோடை (நாரத்தை) உவாய், பெருவாகை, இவைகளின் சாறுகள் வகைக்குப் படி *1.* பசுவின் நெய்படி *1.* இவைகளை ஒரு பாண்டத்திற் சேர்த்துக் கொண்டு, கடுக்காய், வெள்ளுள்ளி வகைக்கு பலம் $\frac{1}{4}$, இந்துப்பு பலம் *1*, சிவதை வேர் பலம் *2* பெருங்காயம், வசம்பு, விளாலரிசி, சுத்தி செய்த காந்தம், கெந்தகம், வகை கழஞ்சு *3.* இவைகளைப் பொடிசெய்து மேற்கூறிய சாறு வகைகளொன்றிலரைத்துக் கஷாயத்துடன் கலந்து கற்கம் முறுகாத பருவத்தில் இறக்கி மூன்றுநாட் சென்றபின் நாளொன்றுக் கிருநேரம் (காலை, மாலை) கால்பலம் கிருதம் (கற்கத்தோடு) அருந்தி இள வென்நீர் ஒரு பலம் குடித்துவரக் கபாலவாயுவும், அதன் உபத்திரவங்களும் விரைவிற் குணமாகும்.

**உள்ளிக் குழம்பு:** வெள்ளுள்ளி, இஞ்சி, முள் முருக்கு, முடி தும்பை, கொள்ளு, சாத்தாவாரி, நொச்சி, தயிர் வேளை, குப்பைமேனி இவைகளின் சாறு வகைக்கு நாழி *1.* இவைகளை ஒரு பாண்டத்தில் கலந்துவைத்துக் கொண்டு திரிகடுகு இருசீரகம், (நற்சீரகம், கருஞ் சீரகம்) பெருங் காயம், திப்பலி மூலம், இந்துப்பு, வாய்விளங்கம், ஏலம், சுத்தி செய்த கெந்தகம், சிவதைவேர், கடுகுரோகணி வசம்பு, உள்ளி, ஓமம், சுத்திசெய்த இரசம், காந்தம், வகை கழஞ்சு *3.* வெல்லம் பலம் *12.*

**செய் முறை :**

சாறு வகைகளோடு, வெல்லத்தைக் கரைத்துப் பாகு பதம் வரக் காய்ச்சி, கெந்தகத்தைப் பொடிசெய்து க்ரந்தத்தையும், மற்றும் சரக்குகளை இடித்தரித்த பொடியினையும் கலந்து அரைத்து பாண்டத்திலிருக்கும் பாகினோடு கலந்து இலேகியமாகக் காய்ச்சி இறக்கி மூன்று தினம் சென்ற பின் நேரம் கழற்சிக்காய் பிரமாணம் காலை மாலை இரு நேரமும் சாப்பிட்டு இளவென்னீர் குடிக்கவும். கபால வாயு தீரும். திராவிடின் ;

**கபால வாயுவிற்குப் புகை :**

சாதிலிங்கம் களஞ்சு $1\frac{1}{2}$, துருசு களஞ்சு $\frac{1}{2}$ வெள்ளைப் பாஷாணம் களஞ்சு $\frac{1}{8}$, கெந்தகம் களஞ்சு $\frac{1}{2}$, முடிதாரம் களஞ்சு $\frac{1}{4}$, இவைகளைச் சுத்திமுறைப்படி சுத்தி செய்து பொடிசெய்து ஒரு பலம் காய்ந்த எருக்கலைப் பட்டைத் தூளோடு கலந்து எரு விருட்டி நெருப்பில் போட்டு புகை கண்ணிற் தாக்காது ஒரு குழாய் வழியாக வைத்து நாளொன்றுக் கிருநேரமாக 7 நாள் குடித்து 8-ம் நாட் தொடக்கம் இளவென்னீரினால் 7 நாள் தலை முழுகவேண்டும். பின் 15-ம் நாள் ஆமணக் கெண்ணெய் தலைக்குத் தேய்த்து சிகைக்காயரப்பிட்டு இளவென்னீரில் முழுகவும். இப்படி ஒரு மண்டலம் வரை நாலுநாட் கொருதரம் ஆமணக்கெண்ணை தேய்த்து முழுகி வரவேண்டும்.

**பத்தியம் :**

உப்பு, புளி, காரம், இனிப்பு, இவைகள் ஒருமண்டலத்திற்குச் சேர்க்கப்படாது. இப்புகையால் கபால வாயு கபாலக்கிரந்தி, கபாலக்கரப்பான், கபால குட்டம் முதலிய கொடும் பிணிகள் தீரும். (தொடரும்.)

---

## ஓர் வேண்டுகோள்.

நமது ஸம்மேளனம் கும்பகோணத்தில் ஏப்ரல் மாதத்தில் நடைபெறப் போகின்றது. இந்த ஸம்மேளனத்தை எவ்வாறு எவ்விதக் காரிய திட்டத்துடன் நடத்தவேண்டும் என்பதைப் பற்றித் தங்களது யோஜனைகளையும்

தாங்கள் ஸம்மேளனத்தில் கொண்டுவரப்போகும் தீர்மானங்களையும் கூடிய சீக்ரம் எனக்கு எழுதுமாறு பிரார்த்திக்கிறேன். காலவரை மிகவும் குறுகிவிட்டதால், அவரவர்களாகவே ஸம்மேளனம் நன்றாக நடத்தவேண்டிய பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு தகுந்த காரிய திட்டங்களையும் வகுத்து ஸம்மேளனத்தையும் சிறப்புற நடத்திவைப்பதுடன் ஸம்மேளனத்தில் நாம் செய்ய தீர்மானித்தவையெல்லாம் கிரியாம்சையில் பூரணமாக ஸபலமாகும்படியும் முயற்சிப்பார்கள் என பிரார்த்திக்கிறேன். தங்களது யோசனைகள், தீர்மானங்கள் முதலியதை உடன் அனுப்பப் பிரார்த்திக்கிறேன்.

23. சிங்காரிநாயக்கன் தெரு
மந்தைவெளி, மைலாப்பூர்,
மதருஸ்.

T. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி,
M. A., L. I. M
பொதுக் கார்யதர்சீ.

# ॥ आयुर्वेदावतारः ॥

[ आयुर्वेदधुरीणः श्री वी. नारायण नायर्, वडवनूर्. ]

(अनुबन्धः)

दक्षप्रजापतेः प्रसूतिसंज्ञायां भार्यायां जाता दुहितरः "श्रद्धा मैत्री दया शान्तिः तुष्टिः पुष्टिः क्रियोन्नतिः बुद्धिः मेधा तितिक्षा ह्रीर्मूर्तिर्धर्मस्य पत्नयः" तदात्मजाश्च "शुभप्रसादाभयसुखमोहादय" इत्यादि बहुधा पुराणवचनेषु प्रतिपादितमस्ति । तुष्टिपुष्ट्यादीनामात्मनि जातानां दोषसाम्यलिङ्गानां परिरक्षणार्थं धर्माचरणमवश्यं कार्यमिति तत्पत्नीत्वमत्रोपदिष्टम् । सती नाम दक्षसुता रुद्राय संहारशक्तिदेवतायै दत्तेत्यादिवचनं तावदिन्द्रियजयेन ब्रह्मचर्यादिना च विषयोपभोगतृष्णाया नियन्त्रणमत्र सतीसंज्ञागम्यमिति तद्रक्षणाधिकृतस्तावत् रुद्रस्तदपमानने प्रकुपितो भवेत् अर्थादखिलामयजनकमोजःक्षयपूर्वकं दोषवैषम्यमापद्येत, इति प्रबोधयति । अत एव सतीमनादृत्य यज्ञं योगक्षेमशुभाद्यप्रयोजकं कर्मारभमाणो दक्षः स्वयं विकृताङ्गो जातस्तत्संबद्धाश्च

तात्कालिकरुद्रकोपप्रयुक्ताद्दोषवैषम्यात्तत्पूर्वतया ज्वरगुल्माद्यामयाभिभूता बभूवुरित्यायुर्वेदीयदक्षकथायामुपवर्णितमस्ति । अश्विन्याद्याः सप्तविंशतिसङ्ख्याातास्तारा दक्षस्य दुहितरश्चन्द्राय दत्ता इत्याख्यायिकया कर्मेन्द्रियवृत्तयः सोमात्मकमोजोऽवष्टभ्य कर्तव्येषु प्रभवन्तीत्यर्थोऽभिप्रेतः । स पुनः सोमस्तत्र रोहिण्यां भृशमासक्तो बभूव । रोहिणी हि तारा ब्रह्माणं देवतात्वेनावलम्ब्य स्थितेति शास्त्रे प्रदर्शितम् । संज्ञा चेयमुत्पत्तिधर्मरोहणक्रियाश्रयमर्थमनुगच्छति । तेनेयं प्रजालाभानुकूला कामात्मिका प्रवृत्तिरित्युन्नीयते । सोमस्तावत्तस्यामतिसक्तः स्वस्य क्षयमर्थादोजःक्षयं राजयक्ष्मसंज्ञकमवापेति कथेयं चरकसंहितायां राजयक्ष्मरोगप्रकरणे प्रतिपादिता दृश्यते । तस्य च रोगस्य चिकित्सा दक्षेणैव कृता न तावत् फलायाकल्पतेति अश्विनीसुतचिकित्सया पुनः प्रशमो जात इत्यादि तत्रैव द्रष्टव्यम् । पूर्वोक्तो हिताहारविहारसेवादिर्दक्षस्याप्रमत्तस्य चिकित्साक्रमः ओजःक्षयात् दौर्बल्यारोचकाविपाकातिकार्श्यादिलिङ्गितं यक्ष्माणं प्रशमयितुमसमर्थोऽभवदिति स्यादेवम्, कः पुनरश्विनोश्चिकित्साविशेषो येन सोमक्षयः परिहृत इति चिन्तनीयम् ॥

### अश्विनीसुतौ ॥

क्रियाशक्तेरुपाधि भूतानां कर्मेन्द्रियव्यापाराणां पालको नियामकश्च देहे सन्निहितो भगवान् वायुः प्राणापानादि भेदेन विकल्पितः सर्वमपीच्छानिच्छापूर्वकं स्पन्दनमन्तर्बहिश्चानुपालयति । व्यष्टिदेहसमवेतस्यास्य समष्टिगतेनान्तरिक्षेण वायुना कृतहस्तावलम्बस्यैवावस्थितिरिति निश्वासोच्छ्वासव्यापारं जीवधारणं च नित्यसंबद्धमनुचिन्तयन्तो जानन्त्येव । आन्तरिक्षवायुगतान् स्वस्थितिप्रयोजकान् गुणानेष स्वयमादाय स्वस्थो भवति । आदीयमानबाह्यवायुगुणानां हीनमिथ्यातियोगेन दूषित एष शरीरधातुभ्यः स्वसंक्रान्तान् दोषान् बहिर्विशोधयितुमसमर्थो रोगानुत्थापयति । अतोस्य यथावत्स्वरूपेऽवस्थानमप्रमत्तेन पुरुषेण संपादनीयमेव । शरीरनाशावधि नायं श्वयति– नाशरहितो भवति– "इत्यश्विना" विति, अध ऊर्ध्वं चाविच्छिन्नं गच्छन्नपानप्राणसंज्ञया द्विधा विभक्तत्वान्नित्यद्विवचनेन निर्दिष्टः । नासाद्वारेण निर्गमप्रवेशा-

वहौ द्वावप्ययमू "नासत्या"विति नित्यसाहचर्याद्यमलतामस्याभिप्रेत्य "दस्रा" विति च प्रसिद्धावस्य पर्यायौ । "नासिक्या" वित्यश्विनोः पर्यायेषु जटाधरः पठति । ब्रह्मणो नासातः संभवमेतयोः प्रतिपादयन्ति पुराणानि । अश्विनो-रनयोः स्वभावस्थितौ सर्वे धातवो मानसाश्च भावा निर्विकारा भवन्ति । वेगधा-रणोदीरणादिभिर्विकुर्वाणोऽयं रोगं– हेतुनिर्हरणार्थं प्रयतमानायाः प्रकृतेः प्रक्षोभं –जनयति । तत्परिहरणे दोषसमीकरणव्यापारे स्वतः प्रवर्तमानः प्रकृतिपक्षपाती च भवति । अयमत्र सर्वतन्त्रयन्त्रधरः प्रवर्तकश्चेष्टानामुच्चावच्चानामित्यादि दिव्यं प्रभावमायुरारोग्यसुखलावण्यादिपालकत्वं चावेक्ष्य देववैद्यत्वमस्य व्यपदिष्टं मुनि-भिरिति कौतुकावहमेतत् । धातुगतानां दोषाणां निर्हरणं प्रशमनं च शुद्धोऽयं प्राणवायुरादधाति । सोमात्मकमोजश्च संतर्पयतीति चिकित्सकलक्षणमसन्दिग्ध-मेष बिभर्त्येव । एवं च शुद्धवायूच्छ्वासनादोजोवृद्धिस्तेन च राजयक्ष्मणः शान्तिः स्वभावत एव भवतीत्यश्विभ्यां चिकित्सितः सोमो निरामयो बभूवेती-यमाख्यायिका स्पष्टमेव विशदयति । अन्यथा पुराणविषया सेयं कथा वैद्य-शास्त्रे नैव प्रवेशमर्हति । नवीनवैज्ञानिकदृष्टोद्घुष्टः सोऽयं शुद्धवायुचिकित्सा-क्रमः प्राचीनैः परमादरेण रक्षित इत्यभिमानावहमेतदस्माकमिति संक्षेपः । यदत्र वातमूत्रादिवेगप्रवृत्तिस्तन्निरोधो विविधाश्च पृथक्चेष्टा विकृता विकृता देहे संपद्यन्ते तत्सर्वमश्विनीसुतदेवताकं क्रियाशक्तिविलसितं क्षेत्रज्ञस्य प्रज्ञापराधा दन्यथा च संप्रवृत्तमिति ज्ञानशक्त्युपाधिकात्तस्माद्गृहीतायुर्वेदार्थावश्विनौ दक्षप्रजापतेः शिष्याविति साधुतर एव कल्पः ॥

## देवेन्द्रः ॥

हेतुस्वरूपसामग्रीविज्ञानं हि व्याधिपरिहरणयुक्तिमादधातीति मुनयो भूयो-ऽपि ज्ञानचक्षुषा रोगारोग्यकरान् भावान् बाह्यस्थूलभूतेषु गवेषमाणा वायुमेव प्रकारान्तरेणैवं किल परामृश्य कृतार्था बभूवुः । तद्यथा— आन्तरिक्षः खल्वयं वातस्तिर्यग्गतिः पदार्थगतानां गुणानामन्यान्यसंक्रमणे सहायो भवति ; आगन्तुकानां भूतविषादीनां मनुष्यदेहस्यान्तर्बहिश्च संपर्कमापादयति ; भूजला-ग्निगोचराणां गुरुद्रवोष्णाद्याश्रयभूताणुजालानां तिर्यगूर्ध्वं च प्रसारणेनातीन्द्रिय

दिव्यलोकमाप्याययति ; गन्धमूष्माणं शैत्यं शब्दं चान्यगतमन्यत्रानुभावयति ; प्रचण्डं चण्डभानुमन्तरिक्षरङ्गे मृदुमध्यतीक्ष्णभावविचित्रितमकाले काले च निचालयंस्तत्सङ्गसंतप्तद्रव्याणूनि दुग्ध्वा बाष्परूपमग्नीषोमात्मकं गुणजालमात्मनि संपाद्य मेघविद्युद्वर्षादिप्रक्षुब्धे नभसि विश्वरूपमिव विस्तारयन्नरीनर्ति, विविधासु कालकलासु वर्षाशीतोष्णवातादिभिः प्राणिनामाहारविहारपरिपाटीमधरोत्तरय-न्नेष सर्वेश्वरत्वमात्मनः प्रकाशयति । अत एव तत्त्वदृष्टयो मुनयस्तावदमुं देवेन्द्रपदे सम्यगभ्यषिञ्चन् । अन्तरिक्षसाम्राज्यमधिष्ठाय स्वभावादेव विघटित-विरुद्धविकलवृद्धक्षीणस्वधर्मान् प्राणिशरीरगुणानोषधीलोहादिद्रव्यजालाणूंश्च तीक्ष्णमृदुद्रवादि भावभिन्नान् प्रायः समीकुर्वाणः सर्वं जगदनुगृह्णानः प्राण-रूपेणानुप्रविश्य स्वयमेव दोषसाम्यमापादयन् वर्षाशरद्धिमादिकालधर्मैस्तत्तद्-द्रव्याणि संस्कुर्वाणो मनुजानामन्नपानादिजीवितयात्रासु बद्धावधानः सिद्धकर्मा भिषगादिपादचतुष्टयसंपत्तिमात्मनि युगपद्दधानश्च सोऽयमिन्द्रः सत्यं प्राणाचार्य-पदमहीनमर्हत्येव । एतत्कृतं कालपरिणामं स्वाङ्गेषु प्रादुर्भूतरूक्षतादिनानुभूय-मानमवधार्य दोषवैषम्यमात्राविवेकपूर्वकं कृत्रिमैरुपायैस्तत्परिहरणयुक्तिषु व्यु-त्पत्तिमधिगतवन्त आत्रेयादयस्तमिममिन्द्रमायुर्वेदाचार्यमाराधयामासुः ॥

एवं च मूलप्रकृतिसमवेते समष्टिजगदधिष्ठानभूते ब्रह्मण्यपूर्ववैद्ये दोष-साम्यमुक्तप्रकारेण निरीक्ष्य व्यष्टिज्ञानशक्तिबीजसंक्रान्तं तमेवायुर्वेदार्थं वहतः क्षेत्रज्ञाभिन्नस्य दक्षस्य ब्रह्मशिष्यत्वं क्रमेणाश्विनीसुतयोस्ततश्च देवेन्द्रस्य शिष्य-भावमुक्तरीत्या परिकल्प्य जगत्कारणसूक्ष्मस्थूलप्रकृतिपर्यवेक्षणेनाद्या ऋषयो वैद्यकतन्त्रसंविधानोपायानार्ज्जयन्ति स्मेति देववैद्यस्वरूपानुव्याख्यानेन स्फुटी-भवति । अत एवायुर्वेददर्शनस्य नित्यत्वे पूर्णत्वे देशकालदशाभेदानुगतत्वे च प्रेक्षावन्तो न विप्रतिपद्यन्ते । नित्यैरिन्द्रियैर्नित्यान् विषयगुणान् निशितानिश्च-लनिर्मलया धिया परितो दृश्यमानं लोकं लोकसम्मितं पुरुषं च समीक्ष्य निर्धा-रितं नित्यमिदं दर्शनमवलम्ब्य प्रवृत्तासु पुनरायुर्वेदकलासु देशकालादिवशाद्विप रिणामशतविषयीभूतासु दृश्यमानमनित्यत्वमपूर्णत्वं च शास्त्रे केचिदारोपयन्ति । पाश्चात्यविज्ञानस्य भौतिकद्रव्यतत्त्वनिरूपणपरस्यापूर्णत्वं द्रव्यगुणतत्त्वनिरूप-

सिद्धस्य युर्वेदस्य पूर्णत्वं च वास्तवः स्वाभाविकश्च धर्मविशेष इति स्थिते नवीनाः केचिदायुर्वेदीयान् पूर्णत्ववादिनोऽवहेलनाञ्जितया दृशा पश्यन्तीत्यत्र प्राचीनर्षिदर्शनपद्धतेर्गाम्भीर्यमेव निदानमुत्पश्यामः । प्रयोगप्रधानेषु कलाभागेषु लोकायत्तं संविधानं परिष्करणं वा संप्रदायविच्छेदाद्राजकीयावधीरणादिभ्यश्चानवाप्यायमायुर्वेदसुधाकरः स्वरूपे स्थितः पाश्चात्यविज्ञानभास्करकराभिभूतोऽपि स्वकलाभिरपूर्णाभिराह्लादयत्याश्वासयति च भूतान्यद्यापीत्यहो जय जयेति जितेन्द्रियाणामृषीणां दिव्यः स दर्शनप्रभावो जयति ॥

ब्रह्मादीनामाधिदैविकरूपेण वर्णितानामेवं मया विरचितं व्याख्यानमपूर्णमन्यथायोजनक्षममखिलपण्डितभ्युपगमायोग्यं चेति स्यादेव विदुषामत्र प्रत्यवस्थानम् । तथा प्रवृत्ते विचारप्रपञ्चेऽवश्यंभावी कोऽपि सिद्धान्तप्रकाशो ममान्येषां च जिज्ञासूनामुपकाराय कल्पेतेत्येवात्र ममाभिसन्धिः ॥

---

## மதிப்புரை

ஸ்ரீ சரகாசார்யர் உபதேசிக்கிருர் :

स्वस्थवृत्तं यथोद्दिष्टं यः सम्यगनुतिष्ठति । स समाः शतमव्याधिरायुषा न वियुज्यते । यच्चान्यदपि किञ्चित् स्यात् अनुक्तमिह पूजितम् । वृत्तं तदपि चात्रेयः सदैवाभ्यनुमन्यते । तस्माद्वृत्तमनुष्ठेयं यदुक्त धार्मिकैः पुरा ।

இதன் தாத்பர்யம்;— ஸ்வஸ்தனுக வாழ விரும்பும் மனிதர்களால் அவசியம் அநுஷ்டிக்க வேண்டிய கடமைகள் இங்கு ஆயுர்வேதத்தில் தோஷ தாது மலங்களை அநுஸரித்து ஆஹார ஆசாரக் கிரமங்கள் உபதேசிக்கப்பட்டன. இதன்படி நடந்தால் வியாதியற்று தீர்க்காயுஸ்ஸுடன் வாழலாம். ஆனல் அரோக திருடகாத்திரமாய் வாழ அநுஷ்டிக்கவேண்டிய கடமைகள் இவ்வளவுதான் என்று கருதிவிட வேண்டாம். விரிவு பயத்திஞல் அவைகள் இங்கு கூறப்படவில்லை. தர்மசாஸ்த்ரக் கிரந்தங்களில் அவைகள் விஸ்தாரமாய் உபதேசிக்கப்பட்டுள்ளன. அவைகளை தர்மசாஸ்திரங்களிலிருந்து அறிந்து எப்பொழும் நடக்கவேண்டும்— என்று.

தர்மசாஸ்திரங்கள் அனந்தமாயிருக்கின்றன. அவைகளில் கூறியுள்ள விஷயங்களோ பரம ஸூக்ஷ்மங்கள். பாஷாஞான த்திஞலும், ஸாதாரண ஸாமர்த்தியத்திஞலும் தர்ம ரஹஸ்யங்களை எளிதில்

அறிந்துகொள்ளுவது முடியாத காரியம். மீமாம்ஸா ந்யாய புராணுதி ஸகல சாஸ்திரங்களிலும் கசடற பாண்டித்யமும், ஸம்பிரதாய ஞானமும் வாய்ந்து அதே காரியமாய் உழைக்கும் பண்டிதர்களுக்கே தர்ம சாஸ்திர ஞானம் ஸாத்தியமாகும். உலகில் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு மிகவும் முக்கியமானதும், இன்றியமையாததுமான தர்மசாஸ்திரோபதேசங்களை எல்லோரும் எளிதில் அறியும்படிக்கு பத்திரிகை வாயிலாகப் பிரசாரம் செய்யப்படின் இதைக்காட்டிலும் பெரிய லோகோபகாரம் வேறெதிருக்கமுடியும்?

இப்புண்ணிய காரியத்தில் இரண்டு பெரியவர்கள் ஸமகாலத்தில் ஈடுபட்டுள்ளார்கள். சென்னை பண்டிதர் ஸ்ரீவத்ஸ ஸோமதேவசர்மா அவர்களும், தஞ்சை மீமாம்ஸா சிரோமணி ஸ்ரீ முத்துகிருஷ்ண சாஸ்திரிகளவர்களுமே இந்தப் புனித ஸேவை செய்ய சென்னையிலும் தஞ்சைநகரிலும் தனித்தனியே பத்திரிகை ஆரம்பித்துள்ளார்கள். லோக க்ஷேமத்திற்காக பிரவிருத்தித்துள்ள இப்பத்திரிகைகளைப் படிப்பதினுலும் அதன்படி நடப்பதாலும்தான் இவர்களுக்கு சரியான நன்றி செலுத்துவதாகுமென்றும் கைம்மாறு செய்துள்ளதாகுமென்றும் நாம் நினைக்கிறோம்.

இவ்விரு பத்திரிகைகளையும் பொதுமக்களைப் பார்க்கிலும் வைத்தியர்கள் படித்து அறிந்துகொள்ளவேண்டியது அதிக அவசியம். காரணம் ஆயுர்வேதமும் தர்மசாஸ்திரமும் ஒரே நோக்கமுள்ளதென்பதே.

மேற்படி தமிழ்மாதாந்திரப் பத்திரிகைகளின் விலாஸங்கள்;—

**வைதிக தர்ம வர்த்தனீ:** ஆசிரியர், ஸ்ரீவத்ஸ ஸோமதேவசர்மா,
**வர்ஷ சந்தா ரூ 3—4—0** சாந்தாசிரமம்.
154, தம்புசெட்டித்தெரு, ஜி. டி. சென்னை.

**ஹித பாஷிணீ:** ஆசிரியர், மீமாம்ஸா சிரோமணி,
**வர்ஷ சந்தா ரூ. 3—0—0** R, முத்துகிருஷ்ண சாஸ்திரிகள்,
1835/3, மேலவீதி தஞ்சாவூர்.

* * *

**தமிழ் சித்தன்:** ஆசிரியர், ரா. ரங்கநாதன்.
**வருடச் சந்தா ரூ. 1—0—0** கார்யாலயம், வெள்ளூர்,
அய்யம்பாளையம், திருச்சி ஜில்லா.

தமிழுலகில் வைத்திய சாஸ்திரத்தின் அபிவிருத்திக்கும், ஆராய்ச்சிக்கும், ஸங்க சக்திக்கும் பாடுபடும் இப்பத்திரிகாசிரியரை தமிழுலகில் அறியாதார் யாருமிரார். ஆகவே நாம் இதைப்பற்றி அதிகமெழுதத் தேவையில்லை. நமது ஸகோதரப் பத்திரிகையின் வளர்ச்சிக்கு ஸ்ரீ தந்வந்தரியடிகளைப் பிரார்த்தனை செய்துகொண்டு மகிழ்ச்சியுடனிதை வரவேற்கிறோம். தமிழ் வைத்திய சாஸ்த்திரச் சுரங்கங்களில் புதைக்கப்பட்டுள்ள அருமை ரத்னங்களை இதன் மூலம் யாவரும் எளிதில் பெறமுடியும்.

# கும்பகோணத்தில் நமது மஹாஸம்மேளனம்.

நமது மஹா மண்டலத்தின் 15-வது வருஷாந்திய ஸம்மேளனத்தை கும்பகோணத்தில் நடத்துமாறு எனது பிரார்த்தனையை மஹாமண்டலத்தார் அங்கீகரித்துள்ளனர். இவ்வருஷாந்திய ஸம்மேளனம் நமது நாட்டின் நிலைமையைக் கவனிக்கும் பொழுது ஒரு முக்யமான கட்டத்தில் நடைபெறுகின்றது. மத்ய சர்க்கார், மாகாண சர்க்கார் இவர்களின் மனப்போக்கு அக்ஞானத்தினாலோ அஸூயையினாலோ ஆயுர்வேதாபிவிருத்தியை வஹிக்காது த்வேஷிக்கும் மேல்நாட்டு வைத்யம் பயிலுபவரின் மனப்பான்மை, அதற்கேற்ப நமது சர்க்கார் அனுஷ்டித்து வரும் ஆயுர்வேதாபிவிருத்தி வழிகளில் ஏற்பட்டிருக்கும் குறைகள், நமது நிலைமை இவைகளைக் கவனிக்கும்பொழுது ஆயுர்வேதத்தின் முற்போக்கு எவ்விதம் ஏற்படப் போகின்றன என்ற ஐயம் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் குடிகொண்டிருக்கின்றது. இவ்வையத்தில் வைத்தியர்களனைவரும் தகுந்த குன்று முயற்சி எடுத்துக்கொண்டு ஆயுர்வேதத்தின் முன்னேற்ற வழியில் நன்கு ஈடுபடுவதுடன், ஒற்றுமையுடன் நம்மை எதிர் நோக்கியிருக்கும் அபாயங்களை எதிர்த்து நிற்கவும் வேண்டும். இந்த முக்கிய சந்தர்ப்பத்தில் ஸம்மேளனம் நல்ல வழிகாட்டும். ஆகையால் வைத்திய ஸகோதரர்களின் பூர்ண ஒத்துழைப்பு மனப்பான்மை எல்லோராலும் வரவேற்கப்படுகின்றது.

இவ்வருடத்திய ஸம்மேளனம் ஏப்ரல்மாதம் 3-வது வாரத் துவக்கத்தில் நடைபெறப் போகின்றது. தலைவர் தேர்தலின் பொருட்டு இன்னாளில் எல்லா வைத்திய ஸகோதரர்களுக்கும் தேர்தல் பிரகடனம் செய்யப்பட்டிருக்கும். இச்சமயத்திற் கேற்ப நமது நிலைமையை யறிந்து எல்லாத் துறைகளிலும் நமது முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் ஒரு பெரியாரைத் தலைவராகத் தேர்ந்து அவருக்கு பூர்ண ஒத்துழைப்பையுமளித்து நமது காரியங்களை திட்டமாக நிறைவேற்றவேண்டும். ஒவ்வொருவரும் தனித் தனியே காரியங்களில் ஈடுபடுவதைக் காட்டிலும் ஸம்மேளனத்தில் கூடியிருந்து ஆலோசனை செய்து ஸங்க சக்தியுடன் காரியத்தில் முற்படுவது தான் அதிக நலம் தரக்கூடியது என்பது யாவருமறிந்த உண்மையே.

மற்றும் சில பிரபல வைத்யர்கள் இச்சம்மேளனத்தில் தங்களுடைய ஆராய்ச்சியுடன் கூடிய உபன்யாஸங்களை நிகழ்த்தப் போகிறார்கள். ஆகையால் எல்லா வைத்தியர்களும் ஸம்மேளனத்திற்கு வந்திருந்து ஸம்மேளனத்தை நன்கு நடத்திக்கொள்ள வேண்டும் என்று என் மனமார்ந்த பிரார்த்தனை.

ஸம்மேளனம் நடக்கும் தேதி, இடம் முதலிய விவரங்கள் கூடிய சீக்ரத்தில் எல்லோருக்கும் அனுப்பப்படும். வேறு விபரம் தேவையுள்ளவர் கீழ்க்கண்ட விலாஸத்திற்கு எழுத பிரார்த்திக்கிறேன்.

லலிதா பார்மஸி,
ரெட்டிராயர் குளம்
கீழ்கரை, கும்பகோணம்.

V. R. லக்ஷ்மீகாந்த சர்மா,
வைத்ய விசாரத-ஆயுர்வேத
சிரோமணி,
வரவேற்பு கமிட்டி காரியதர்சி.

VAIDYA CHANDRIKA. Regd. No. M. 4018

வைத்ய வாசஸ்பதி பண்டிட்

**P. S. ராமசர்மா அவர்களின்**

நீண்ட கால பரீக்ஷை அனுபவங்களினால் கண்டு பிடிக்கப்பட்ட

கைகண்ட பலனளிக்கும்

## “சக்தி ஸஞ்சீவி”

(Regd.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக் கட்டிகளை எந்நிலைமையிலும்
போக்குவதிலும் வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்,
எங்கும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:—

**ஸ்ரீ சக்தி விலாஸ வைத்யசாலா,**

கரூர், S. I. Ry.,

Published by Pandit S. M. Sundararajacharya for Tamil Nad A... யாவ
Maha Mandalam & Printed at the Sri Vilasam Press Sri...